இன் ... நவீன முறையில் வீடியோ படப்பிடிப்பிற்கு
எவர்விஷன்
21, மணிக்கூட்டு வீதி
யாழ்ப்பாணம்

பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

வீடியோ கமரா, T. V. வீடியோ டெக் ஆகியவற்றை உத்தரவாதத்துடன் உடனுக்குடன் திருத்திக் கொள்வதற்கு
எவர்விஷன்
21, மணிக்கூட்டு வீதி
யாழ்ப்பாணம்

சுடர் 9 திருவள்ளுவர் ஆண்டு 2025 வைகாசி 31 செவ்வாய்க்கிழமை (14 06 1994) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 198

### ஒரு வாரத்தில் இரண்டாவது முறை ஊடுருவித் தாக்குதல்

# காரைநகரில் புலிகளின் கண்ணி வெடியில் மற்றொரு படை வாகனம் சிக்கிச் சிதறியது!

## கடற்படையினர் நால்வர் பலி ஆறு பேர் படுகாயமுற்றனர்

கொழும்பு, ஜூன் 14

காரைநகர் கடற்படைத் தளத்துக்குள் ஊடுருவி விடுதலைப் புலிகள் விதைத்த கண்ணிவெடியில் நேற்று முன்தினம் கடற்படையினரின் மற்றொரு வாகனம் சிக்கிச் சிதறியது. இதனால் நான்கு கடற்படையினர் கொல்லப்பட்டனர். ஆறு படையினர் காயமடைந்தனர்.

கடந்த வாரம் திங்களன்று காரைநகர் தளத்தில் புலிகள் நடத்திய இதே போன்ற தாக்குதலில் படையினரின் பவுஸர் ஒன்று வெடித்துச் சிதறி ஆறு நாட்களின் பின் இந்தத் தாக்குதல் இடம் பெற்றிருக்கிறது.

நேற்று முன்தினம் இடம்பெற்ற இத்தாக்குதலை அடுத்து, காயமுற்ற சிப்பாய்களை மீட்க வந்த மற்றொரு படை வாகனம் மீதும் விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தியதாக 'வெரித்தாஸ்' வானொலி தெரிவித்தது. (உ-3-5-6)

## மேலும் இரண்டு சிப்பாய்கள் வடக்கு தாக்குதல்களில் பலி!

கொழும்பு, ஜூன் 14

மாதகலில் உள்ள படையினரின் முன்னணி காவல்அரண் ஒன்றின் மீது விடுதலைப் புலிகள் நேற்று முன்தினம் நடத்திய தாக்குதலில் இராணுவச் சிப்பாய் ஒருவரும் — யாழ்ப்பாணத்தின் மற்றொரு முன்னணிக் காவலரண் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் ஒரு சிப்பாயும் கொல்லப்பட்டதாக கொழும்பில் பாதுகாப்பு வட்டாரங்களை மேற்கோள் காட்டி செய்தி ஏஜென்சிகள் தகவல் வெளியிட்டன.

இச்சம்பவங்களில் நான்கு படையினர் வரை உயிரிழந்ததாகத் தெரிவிக்கப்பட்டது. (உ-3-5-6)

## புலிகளின் தாக்குதல் தீவிரம்

கொழும்பு, ஜூன் 14

தொடர்ந்து இடம்பெற்று வரும் தாக்குதல்கள், விடுதலைப் புலிகள் தமது நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்தி வருவதையே காட்டுகின்றன.

இவ்வாறு பி. பி. ஸி. குறிப்பிட்டது.

கடந்த பத்து நாட்களில் கொல்லப்பட்ட படையினரின் எண்ணிக்கை 18 க்கும் அதிகம் என்றும் பி. பி. ஸி. சுட்டிக்காட்டியது.

கடந்த வாரம் திருமலையின் கிழக்குப் பகுதியிலும், வெலிஓயாவிலும், அம்பாறைப் பகுதியிலும் இராணுவத்தினர், பொலீஸார் என மொத்தம் 12 பேர் கொல்லப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இதனிடையே —

யாழ்ப்பாணத்தில் இராணுவ முகாம்களைச் சுற்றியுள்ள தமது நிலைகளை விடுதலைப் புலிகள் பலப்படுத்தியுள்ளதாகத் தெரியவருகின்றது என்று பி.பி.ஸி சிங்கள சேவையில் தெரிவிக்கப்பட்டது. [உ-3-5-6]

## மண்டைதீவுப் பகுதியிலிருந்து தொடர்ந்து ஷெல் தாக்குதல்

### கொழும்புத்துறையில் கர்ப்பிணி உட்பட நால்வர் காயம்

யாழ்ப்பாணம், ஜூன் 14

மண்டைதீவில் நிலைகொண்டுள்ள படையினர் நேற்று மாலை 5.40 மணியளவில் திடீரென நடத்திய ஷெல் தாக்குதலில் கொழும்புத்துறை சுவாமியார் வீதியில் கர்ப்பிணிப் பெண் உட்பட ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நால்வர் காயமடைந்தனர்.

படையினர் ஏவிய ஷெல்களில் ஒன்று வீடு ஒன்றின் முன்பாக நின்ற தென்னை மரத்தில் விழுந்து வெடித்தது. அதனால் வீட்டின் முன்றலில் இருந்த நால்வர் காயமடைந்தனர்.

பரராசசிங்கம் பூமணி (வயது 50), அவரது மகளான கர்ப்பிணிப்பெண் திருமதி சுதிரமலைநாதன் சூரியகலா (வயது 33), சூரியகலாவின் கணவரான இரத்தினம் சுதிரமலைநாதன் (வயது 34), அவர்களின் ஒன்றரை வயது மகனான ஆனந்தி ஆகிய நால்வருமே காயமுற்றனர்.

மண்டைதீவுப் படையினர் நேற்று மாலை ஏவிய மற்றும் இரண்டு ஷெல்கள் கொழும்புத்துறை மேற்கு ஏ. வி. வீதியில், பாஷையூர் கடற்கரை பகுதியிலும் விழுந்து வெடித்துள்ளன.

கொழும்புத்துறை மேற்கில் விழுந்த ஷெல்லினால் வீடு ஒன்று சேதமடைந்துள்ளது.

பாஷையூர் புனித அந்தோனியார் ஆலயத்தில் அந்தோனியார் பெருநாள் நேற்று நடைபெற்றது குறிப்பிடத்தக்கது.

யாழ். கரையோரப் பகுதிகளை நோக்கி தொடர்ந்து நடத்தப்படும் ஷெல் தாக்குதல்களினால் கரையோரப் பகுதிகளில் தொடர்ந்து பதற்றம் நிலவுகிறது. (உ-3-5-162-173)

## தெற்கில் பல்கலை. மாணவர் தொடர்ந்துமறியல்போராட்டம்!

கொழும்பு, ஜூன் 14

உலக வங்கியின் ஆலோசனைக்கு இணங்க பல்கலைக்கழகக் கல்வியை மட்டுப்படுத்துவதற்கு இலங்கை அரசாங்கம் எடுக்கும் முயற்சிகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்து, நாட்டில் உள்ள பல பல்கலைக்கழகங்களில் மாணவர்கள் தற்போது சத்தியாக்கிரகம், மறியல் போராட்டம் ஆகியவைகளில் ஈடுபட்டுள்ளனர் என்று ''வெரித்தாஸ்'' வானொலி அறிவித்தது.

ருகுணு பல்கலைக்கழகத்தின் மாணவர்கள் விடுதி வசதிகள் வழங்காமைக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் ஆரம்பித்துள்ள சத்தியாக்கிரகம் நேற்று ஆறாவது நாளாக தொடர்ந்து நடந்தது.

விடுதி வசதிகளைச் செய்து கொடுக்க அரசு தவறியதைத் தொடர்ந்து, மாணவர்கள் மாத்தறை நகரில் உள்ள ருகுணு பல்கலைக்கழகத்தின் விஞ்ஞான பீடக் கட்டடத்தை நேற்று பலாத்காரமாகக் கைப்பற்றியதுடன், சில மாணவர்களுக்கு அக்கட்டடத்தில் தங்க தற்காலிக விடுதி வசதியும் ஏற்படுத்திக் கொடுத்தனர்.

ருகுணு பல்கலைக்கழகத்தின் மாத்தறை விஞ்ஞான பீடக் கட்டடத்தில் தற்போது 150 மாணவர்களும் 39 பிக்கு மாணவர்களும் தங்கி வருகின்றனர்.

ருகுணு பல்கலைக்கழகத்தின் வேறு 190 மாணவருக்கு எலிக்கந்த பகுதியில் உள்ள ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியின் விடுதிகளில் விடுதி வசதிகள் வழங்கப்பட்டுள்ளன. இதனால் ஆசிரிய மாணவருக்கு அசௌகரியங்கள் ...

(6ஆம் பக்கம் பார்க்க)

### படகுச் சேவை

யாழ்ப்பாணம், ஜூன் 14

கிளாலி - பூநகரிப் படகுச் சேவை இன்று செவ்வாய்க்கிழமை வழமையான நேரத்தில் நடைபெறும் என்று விடுதலைப் புலிகளின் அரசியல் துறையினர் அறிவித்துள்ளனர்.

### 7,250 பரல் ம. எண்ணெய் நேற்று வந்தது

யாழ்ப்பாணம், ஜூன் 14

ஏழாயிரத்து 250 பரல் மண் எண்ணெயுடன் ''மாஹோ'' கப்பல் நேற்றுக்காலை பருத்தித்துறைக்கு வந்து சேர்ந்தது. கப்பலில் இருந்து மண்எண்ணெய் இறக்கும் பணி உடனடியாக ஆரம்பமானது. (உ-3-173-162)

### தபால் பொதிகள் வந்து சேர்ந்தன

யாழ்ப்பாணம், ஜூன். 14

நேற்று பருத்தித்துறைக்கு வந்து சேர்ந்த ''மாஹோ'' கப்பலில் 284 தபால் பொதிகளும் எடுத்து வரப்பட்டுள்ளன.

இத்தபால் பொதிகளை கப்பலில் இருந்து உடனடியாக இறக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் —

இன்று அல்லது நாளை அவை உரியவர்களுக்கு விநியோகிக்கப்படும் என்றும் —

யாழ். பிரதம தபாலதிபர் திரு. க. கோடீஸ்வரன் தெரிவித்தார். (உ-3-173-162)

### சிறுவன் மரணம்

ஒழுங்கை வளைவில் திரும்ப முயன்ற லொறிக்கும், வீதி மதிலுக்கும் இடையில் சிக்கி நசியுண்டு சிறுவன் ஒருவன் மரணமானான்.

கடந்த சனிக்கிழமை மாலை சாவகச்சேரி நுணாவில் சந்திக்கு அருகில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் மட்டுவில் தெற்கைச் சேர்ந்த செல்லத்துரை ரூபன் (வயது 12) என்ற சிறுவன் உயிரிழந்தான். (உ-117)

### குருநகர் மீன்சந்தை இடம் மாற்றம்

கடந்த ஞாயிறன்று இடம்பெற்ற ஷெல் தாக்குதலை அடுத்து குருநகர் மீன்சந்தைப் படுத்தும் பகுதி இடம்மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

குருநகர் கடற்கரை வீதியில் தொடர்மாடிக் கட்டடங்களுக்கு எதிரில் அமைந்துள்ள — கடற்றொழில் அபிவிருத்திச் சங்க பணிமனைக்கு பின்புறமாக — இச்சந்தை தற்காலிகமாக நடைபெற்றுவருகிறது.

### புகழுடல் ஊர்வலம்: இறுதி நேரத்தில் மாற்றம்

பேராசிரியர் துரைராசாவின் இறுதி ஊர்வலம் தொடர்பான ஏற்பாடுகளில் இறுதி நேரத்தில் மாற்றம் செய்யப்பட்டிருப்பதாக இன்று அதிகாலை 2 மணிக்கு அறிவிக்கப்பட்டது.

அதன்படி —

இன்று காலை 9 மணிக்கு புகழுடல் யாழ். பல்கலைக்கழகத்திலிருந்து பலாலி வீதி, ஆஸ்பத்திரி வீதி, கண்டி வீதி வழியாக சாவகச்சேரி, கொடிகாமம், மந்திகை, நெல்லியடி சந்தி ஆகியவை ஊடாக ஊர்வலமாக எடுத்துச் செல்லப்படும்.

இன்று பிற்பகலுக்கு முன்னர் புகழுடல் பேராசிரியரின் வதிவிடத்தை அடையும். அங்கு நாளை காலை 10 மணிக்கு அஞ்சலிக் கூட்டம் நடைபெறும். (உ-3-5-6)



## பேராசிரியரின் புகழுடல் நள்ளிரவு வந்து சேர்ந்தது

யாழ்ப்பாணம், ஜூன் 14

பேராசிரியர் துரைராசாவின் புகழுடல் இன்று அதிகாலை 12 40 மணிக்கு வவுனியா - தாண்டிக்குளம் கிளாலி ஊடாக யாழ் பல்கலைக்கழகத்துக்கு எடுத்து வரப்பட்டது.

முன்னாள் துணைவேந்தரின் புகழுடலை, யாழ் பல்கலைக்கழகத்தின் தற்போதைய துணைவேந்தர் மற்றும் விரிவுரையாளர்கள், போதனாசிரியர்கள், மாணவர்கள் அங்கு பொறுப்பேற்றனர்.

புகழுடல் பல்கலைக்கழக முன்றிலை வந்தடைந்தபோது பல்கலைக்கழக வாசலில் பல்கலைக்கழக மாணவ மாணவிகள் அணி வகுத்து நின்று அஞ்சலி செலுத்தினர்.

அம்புலன்ஸில் எடுத்து வரப்பட்ட புகழுடல் பல்கலைக்கழக வாசலிலிருந்து கைலாசபதி அரங்கு வரை எடுத்துச் செல்லப்பட்ட போது பல்கலைக்கழக மாணவ மாணவிகள், கல்விமான்கள், போதனாசிரியர்கள் இரு மருங்கிலும் அணி வகுத்து நின்று பூமாரி பொழிந்து, அழுகுரல் எழுப்பி அஞ்சலி செலுத்தியது நெஞ்சை உருக்குவதாக இருந்தது.

பேராசிரியரின் புகழுடல் தற்போது பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் பொதுமக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டுள்ளது.

இச்செய்தி அச்சுக்குப் போகும் போது

(6ஆம் பக்கம் பார்க்க)

## பூரண துக்கம் அனுஷ்டிப்பு

பேராசிரியர் துரைராசாவின் மறைவை ஒட்டி யாழ். குடாநாடு தொடர்ந்து சோகத்தில் ஆழ்ந்திருந்தது; பூரண துக்கம் அனுஷ்டிக்கப்பட்டது.

பேராசிரியர் மறைந்து மூன்றாம் நாளான நேற்று குடாநாட்டில் முக்கிய பகுதிகள், பொது இடங்கள், அரச மற்றும் தனியார் நிறுவனங்கள், பாடசாலைகள் போன்ற இடங்கள் எங்கும் சோகத்தை வெளிப்படுத்தும் வகையில் கறுப்புக் கொடிகள் பறக்கவிடப்பட்டிருந்தன. வீதிகள் தோறும் வாழை, தோரணங்கள் கட்டப்பட்டிருந்தன. பொது இடங்களில் சோககீதம் ஒலிபரப்பானது.

அரச மற்றும் தனியார் நிறுவன ஊழியர்கள் கறுப்புப் பட்டி அணிந்து தமது கடமைக்குச் சென்றனர்.

தமிழீழ தேசியக்கொடி தொடர்ந்து அரைக்கம்பத்தில் பறக்கவிடப்பட்டிருந்தது.

யாழ் பல்கலைக்கழகம், யாழ். பல்நிலைப்பகுதி மற்றும் விடுதலைப் புலிகளின் முகாம்கள், பாசறைகள் எங்கும் தோரணங்கள், வாழைகள் கட்டப் பட்டிருந்ததுடன் கறுப்புக் கொடிகளும், அஞ்சலி பதாகைகளும் தொங்கவிடப் பட்டிருந்தன.

நேற்று பாடசாலைகளில் மாணவர்களின் வரவு மந்தமாக இருந்தது.

## புகழுடல் ஊர்தியின் பாதை

யாழ்ப்பாணம், ஜூன் 14

பேராசிரியர் துரைராசாவின் புகழுடல் இன்று நண்பகல் 12 மணிக்கு யாழ் பல்கலைக்கழகத்திலிருந்து ஊர்வலமாக, இதற்கென தயாரிக்கப்பட்ட விசேட ஊர்தியில் அவரது வதிவிடத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

பேராசிரியரின் புகழுடலை ஊர்வல ஒழுங்குக்காக நண்பகல் 12 மணிக்கு திருநெல்வேலிச் சந்தியில் வைத்து தமிழீழ விடுதலைப் புலிகள் ஏற்றுக் கொள்வர்.

அதன் பின்னர் புகழுடல் ஊர்வலமாகச் செல்லும் பாதையும் ஆங்காங்கே ஒன்று கூட வேண்டும் என எதிர்பார்க்கப்படும் அமைப்புகளினதும் விபரத்தை தமிழீழ விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்ட அரசியல்துறையினர் வெளியிட்டுள்ளனர் விபரம் வருமாறு:-

| | | | |
|---|---|---|---|
| நண்பகல் 12-00 | — | திருநெல்வேலிச் சந்தி | — மருத்துவ பீட மாணவர்கள் |
| பிற்பகல் 12-45 | — | ஆடியபாதம் வீதி வழியாக கோக்குவில் சந்தி | — கொக்குவில் இந்து மாணவர் |

(6ஆம் பக்கம் பார்க்க)

## நாளை இறுதிச் சடங்கை ஒட்டி குடாநாட்டில் கடையடைப்பு

மறைந்த பேராசிரியர் துரைராசாவின் இறுதிக் கிரியைகள் நாளை வடமராட்சியில் நடைபெறும்.

இதனை ஒட்டி நாளை குடாநாடு எங்கும் முழு கடையடைப்புடன் துக்கம் அனுஷ்டிக்கப்படும்.

பேராசிரியரின் புகழுடல் நாளை காலை 10 மணிக்கு அவரது இல்லத்தில் இறுதிச் சமயச் சடங்குகள் நடைபெறும்.

அதனைத் தொடர்ந்து முற்பகல் 10 30 மணியளவில் புகழுடல் அவரது இல்லத்திலிருந்து மாலுசந்தி, உடுப்பிட்டி வீதி வழியாக உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் ஆண்கள் பாடசாலைக்கு எடுத்து வரப்பட்டு அங்கு விசேட மேடையில் வைக்கப்படும்.

அங்கு முற்பகல் 11.30 முதல் பிற்பகல் 12 30 வரை அஞ்சலியும் அஞ்சலிக் கூட்டமும் நடைபெறும்.

பின்னர் அங்கிருந்து மேஜர் சுலாம் வீதி, பருத்தித்துறை வீதி ஆகிய வழியாக புகழுடல் ஆலங்கட்டை மயானத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு பிற்பகல் 3 00 மணியளவில் புகழுடல் தீயுடன் சங்கமமாகும்.

### நாளை மூடப்பட்டிருக்கும்

பேராசிரியர் துரைராசா அவர்களின் மறைவையொட்டி அனைத்து அனுமதி வழங்கும் செயலகங்களும், மோட்டார் ஊர்திப் பதிவுச் செயலகம், விசாரணைப் பகுதிச் செயலகம், யாழ்-வன்னி தொடர்புச் சேவைச் செயலகம் ஆகியனவும் நாளை திறக்கப்படமாட்டா என பொதுமக்களின் கவனத்திற்கு போக்குவரத்து கண்காணிப்பு பிரிவினர் அறியத் தருகின்றனர். (உ)

### பாடசாலைகளும் நாளை இயங்கா

யாழ்ப்பாணம், ஜூன் 14

நாளை சகல பாடசாலைகளையும் மூடி, மறைந்த பேராசிரியர் துரைராசாவின் இறுதிச் சடங்கில் கலந்து அவருக்கு அஞ்சலி செலுத்தும்படி யாழ்ப்பாணம் கல்வி வலயம் II இன் கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார். (உ)

### கிளிநொச்சியிலும் அஞ்சலி

பேராசிரியர் துரைராசாவின் பூதவுடல் நேற்று கொழும்பிலிருந்து எடுத்து வரப்படும் வழியில் யாழ். பல்கலைக்கழகத்தின் கிளிநொச்சி விவசாய பீடத்திலும் மாலை 5 மணி முதல் 7 மணி வரை அஞ்சலிக்கு வைக்கப்பட்டது. பெரும் திரளானோர் அஞ்சலி செலுத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அமரர் பேராசிரியர் அ. துரைராசா
அவர்களுக்கு

## உள்ளூராட்சியின் கண்ணீர் அஞ்சலி

யாழ். பல்கலைக் கழகத்தின் படலையைப் பாமர மக்களுக்கும் திறந்து வைத்த பேரறிஞனே! நீ நீடு வாழ்வாய்!!

அன்னாரை இழந்து நிற்கும் மனைவி, மக்களினதும், உற்றாரினதும் தமிழினத்தினதும் துயரில் நாமும் பங்கு கொள்கின்றோம்.

உள்ளூராட்சித் திணைக்களமும்,
உள்ளூராட்சி மன்றங்களும்.
யாழ்ப்பாணம் - கிளிநொச்சி
மாவட்டங்கள்.

யாழ்ப்பாணம்,
1994-06-13. (இ-8466)

## கண்ணீர் அஞ்சலி

### ஐயாத்துரை சத்தியதாசன்

வேலணை - ஊர்காவற்றுறை கல்விக் கோட்ட வர்த்தக முதன்மை ஆசிரியர்
திருமதி தமமணி
அவர்களின் அருமைக் கணவர்
திரு. சத்தியதாசன்
அவர்களின் பிரிவினால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைக் கண்ணீர் அஞ்சலி ஆக்குகின்றோம்.

வேலணை - ஊர்காவற்றுறை
கோட்டக்கல்வி அலுவலர்
நலன்புரிக் கழகம்

[31398]

## சனசமூக நிலையங்களுக்கான வேண்டுகோள்

### பேரறிஞர் அ. துரைராசா
அவர்களது

மறைவையொட்டி அன்னாரைக் கௌரவிக்கும் முகமாக உங்கள் நிலையக் கட்டடங்களின் மேலே கறுப்புக் கொடிகளைப் பறக்கவிடுவதோடு அன்னாரின் இறுதி நிகழ்வுகளிலும் பங்கு கொள்ளும் வண்ணம் கேட்டுக் கொள்கின்றேன்.

சுந்தரம் டிவகலாலா,
பிரதேச உள்ளூராட்சி உதவி ஆணையாளர்,
யாழ்ப்பாணம்-கிளிநொச்சி மாவட்டங்கள்.

யாழ்ப்பாணம்.
1994 - 06 - 13 [சி-8467]

## கண்ணீர் அஞ்சலி

### பேராசிரியர் அழகையா துரைராசா

எமது பேரவை ஆரம்பிக்கப்பட்ட காலம் முதல் தலைவராக செயல்பட்டும், வருடாந்த பரிசளிப்பு விழாக்களில் தமிழுக்கும், சைவத்திற்கும், பண்பாட்டிற்கும் தொண்டாற்றிய பெரியார்களுக்கு விருதுகள் வழங்கி கௌரவித்து எமது பேரவையை வழி நடத்திச் சென்ற பேராசானுக்கு எமது இதயம் கனிந்த கண்ணீர் அஞ்சலியை செலுத்துகின்றோம்.

தொண்டமனாறு
சன்னதியான் ஆச்சிரம
சைவ கலை, பண்பாட்டு பேரவையினர்.

(31396)

## கண்ணீர் அஞ்சலி



அமரர்
### பேராசிரியர் அழகையா துரைராசா
(முன்னாள் துணைவேந்தர்-யாழ் பல்கலைக்கழகம்)

மலர்வு: 10-11-1934
உதிர்வு: 11-06 1994

மனங்களில் நிறைந்த
அன்புத் தந்தையே!
உமது மறைவுச் செய்தி
இதயத்தில் இடித்தது
கண்களில் கண்ணீர்
கரைந்து சென்றது.

ஊழியர் பங்கேற்கும்,
விளையாட்டு அவை,
யாழ். பல்கலைக்கழகம்.

(சி/8469)

## எமது இதய அஞ்சலிகள்

கல்விச் சமூகத்தின் கலங்கரை விளக்கமாய்த் திகழ்ந்த

### பேராசான் கலாநிதி அ. துரைராசா

அவர்களுக்கு எமது இதயம் நிறைந்த கண்ணீர் பூக்களை காணிக்கையாக்குகிறோம்.

அவரது பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கும் எமது அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

ஐக்கிய விளையாட்டுக் கழகம்.
பருத்தித்துறை.

(இ/8472)

## கண்ணீர் அஞ்சலி

யாழ். மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத்தின் செயற்பாடுகளின் பின்னணியில் பங்களிப்பாக இருந்தவரும், எமது அங்கத்துவ நிறுவனமாகிய ஊற்று நிறுவனத்தின் தலைவருமாகிய

### அமரர் பேராசிரியர் அ. துரைராசா
அவர்களின்

மறைவு குறித்து
எமது ஆழ்ந்த அனுதாபங்களைத்
தெரிவித்துக்கொள்கிறோம்,

COUNCIL OF NGOO JAFFNA

யாழ். மாவட்ட
அரச சார்பற்ற
நிறுவனங்களின்
இணையம்
100, இராசாவின் தோட்டம்,
யாழ்ப்பாணம்.

[சி-8473]

## இதய அஞ்சலி

### பேராசிரியர் அ. துரைராசா
அவர்களுக்கு

தலைசிறந்த கல்விமானும் எமது தேசத்தின் உயர் கல்விக்காக அயராது உழைத்து அரும்பெரும் சேவையாற்றியவரும், சிறந்த தேச பக்தரும், மாமேதையுமான

அமரர் பேராசிரியர் அ. துரைராச வுக்கு
எமது இதய அஞ்சலியைத் தெரிவித்து
கொள்கிறோம்.

-நல்லூர் வணிகர் கழகம்.

(சி/8468)

## கண்ணீர் அஞ்சலி

### அமரர் பேராசிரியர் அ. துரைராசா



எமது நிறுவனத்தின் ஸ்தாபக உறுப்பினராகவும், தலைவராகவும் இருந்த தமிழீழ மக்களுக்கு
பேராசிரியர் அ. துரைராசா
அவர்கள்

ஆற்றிய பணி அளப்பரியது. என்றும் மக்களுக்காக இலட்சிய நோக்குடன் அவர்களோடு ஒருவராக இருந்து செய்த சேவையை எவரும் மறக்க முடியாது. அவர் எதிர்பார்த்த இலட்சியப் பாதையில் பாதிவழியில் எம்மை விட்டுப் பிரிந்து விட்டார். அவர்களுக்கு எமது நிறுவனத்தின் சார்பிலும் மக்களின் சார்பிலும் கண்ணீர் அஞ்சலியைச் செலுத்துவதுடன், அவர்களது குடும்பத்திற்கு எமது கவலையையும் ஆழ்ந்த அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அதேநேரம் அவர் எதிர்பார்த்த இலக்கை எட்டுவதே அவருடைய முழுமையான ஆத்ம சாந்திக்கு வழிவகுக்கும்.

ஊற்று நிறுவனமும்,
கிராமிய தற்சார்பு வளர்ச்சி
கழகங்களும்.

[31391]

# தாக்குதல் படைப் பிரிவுகளுக்கு பொறுப்பாக புதிய தளபதிகள்

கொழும்பு, ஜூன் 14
யுத்தத்துடன் தொடர்புடைய விசேட தாக்குதல் படைகளை ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கா புனரமைப்புச் செய்துள்ளார்.

யாழ்ப்பாணப் பகுதிக்கான முதலாவது விசேட தாக்குதல் படைக்கு பிரிகேடியர் ஏ. கே. ஜெயவர்த்தனாவும் —

வவுனியாவுக்கான இரண்டாவது விசேட தாக்குதல் படைக்கு பிரிகேடியர் ஏ.எஸ். பீரிஸும் —

திருமலை, வெலிஓயா பகுதிகளுக்குப் பொறுப்பான மூன்றாவது விசேட தாக்குதல் படைக்கு பிரிகேடியர் நளின் அங்கமனவும் தளபதிகளாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

பிரிகேடியர் லால்வீரசூரிய விசேட ரிசர்வ் தாக்குதல் படைக்குப் பொறுப்பாக உள்ளார்.

பிரிகேடியர் சிவசண்முகம், மாஸ்டர் ஜெனரலாகவும் —

பிரிகேடியர் டபிள்யு. எம். பி. பெர்னாண்டோ பொதுத் தலைமையகத்தின் ஜெனரலாகவும் —

பிரிகேடியர் எஸ்.ரி.ரி. ஜயசுந்தர, குவாட்டர் மாஸ்டர் ஜெனரலாகவும் —

பிரிகேடியர் எச். எஸ். ஹப்பு ஆராச்சி துணைக் குவாட்டர் மாஸ்டர் ஜெனரலாகவும் —

ஜனாதிபதி விஜேதுங்காவினால் நியமிக்கப்பட்டுள்ளனர். (உ-எ)

## கண்ணீர் அஞ்சலி



எங்கள் மண்ணுக்காகவும் மக்களுக்காகவும் துணிந்து நின்று உழைத்த — தன்னலம் பாராது எமது மக்களின் கல்வி வளர்ச்சிக்காக தன்னை அர்ப்பணித்த — யாழ். பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர்

### பேராசிரியர் அ. துரைராசா

அவர்களது பேரிழப்புச் செய்தி கேட்டு ஆறாத் துயரில் மூழ்கி நிற்கின்றோம். அன்னாருக்கு எமது கண்ணீர் அஞ்சலியையும், பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

யாழ். இந்து
பழைய மாணவர் சங்கம்

யாழ். இந்துக்கல்லூரி,
யாழ்ப்பாணம். (சி/8478)

## கண்ணீர் அஞ்சலி



பேராசிரியர்
### அழகையா துரைராசா

"பொங்கு தமிழீழப் பொறியியலின் பெருமேதை
தங்குயாழ் பல்கலையின் தனித்துவமாம்
துணைவேந்தர்,
இங்கிதமாய் கல்விக் கலை வளர்த்த பெருந்தொண்டர்
எங்கேயென் றழ இமைமூடிக் கண்வளர்ந்த
தங்கக்குடமே, தாமரையின் மென்லிதழே
பங்கமில்லாப் புகழுடம்பே பாரில் நல்துரை ராசா
எங்கள் உளம் வெதும்ப எங்கையா சென்றிட்டீர்?

கல்விக் கழகம்
கல்வியியற்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

(31406)

யாழ் பல்கலைக்கழக
முன்னாள் துணைவேந்தர்
### பேராசிரியர் அ. துரைராசா
அவர்கட்கு

## எமது கண்ணீர் அஞ்சலி

தோற்றம்: 10 — 11 — 1934
மறைவு: 11 — 06 — 1994



நெடிதுயர்ந்த தோற்றம்,
நிறைவான புன்னகை
பணிவான பேச்சு பண்புகளின்
உறைவிடம்
அழிபோல் அறிவுடை
அருஞ்செயல் வீரரே
ஆறாத்துயர்கொண்டு அஞ்சலி
செய்கின்றோம்

தென்மராட்சிக் கல்விக் கோட்டம்
சாவகச்சேரி

(இ-8477)

## ஆலயங்களில்

திருநெல்வேலி தலங்காவற் பிள்ளையார் கோயில் வருடாந்த மஹோற்சவம் இன்று செவ்வாய்க்கிழமை மு.ப 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி எதிர்வரும் 28 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை வரை— பதினைந்து தினங்கள் — நடைபெறும்.

எதிர்வரும் 27 ஆம் திகதி காலை தேர்த்திருவிழாவும் மறுதினம் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும் (ஓ-111)

★ ★ ★

யாழ்ப்பாணம் ஐயனார் கோயிலடி ஸ்ரீவிசுவேசப்பிள்ளையார் கோயில் வருடாந்த மஹோற்சவம் இன்று செவ்வாய்க்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது. எதிர்வரும் 24 ம் திகதி வெள்ளிக்கிழமை தேர்உற்சவமும் அடுத்த நாள் தீர்த்தஉற்சவமும் நடைபெறும். (ஓ)

★ ★ ★

மிருசுவில் விடத்தற்பளை சம்பாவெளி விநாயகர் ஆலய வருடாந்த மஹோற்சவம் இன்று செவ்வாய்க்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பத்து தினங்கள் நடைபெறும். (ஓ-117)

★ ★ ★

கோப்பாய் வெள்ளெருவைப் பிள்ளையார் கோயிலின் வருடாந்த மகோற்சவம் இன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும். எதிர்வரும் 22 ஆம் திகதி இரதோற்சவம் நடைபெறும்.

★ ★ ★

அளவெட்டி பெருமாக்கடவைப் பிள்ளையார் கோயில் பலவருட மஹோற்சவம் இன்று முற்பகல் 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி பத்து தினங்கள் தொடர்ந்து நடைபெறும். (உ-89)

## ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 14
யாழ். மாவட்ட அரசியல் துறைச் செயலகத்தில் இன்று காலை 9.00 மணிக்கு நடைபெறவிருந்த — பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர்கள், பணிப்பாளர் சபையினருக்கான — சந்திப்பு தவிர்க்க முடியாத காரணத்தினால் பிற்போடப்பட்டுள்ளதாக தமிழீழ விடுதலைப் புலிகளின் யாழ் மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் அறிவித்துள்ளார். (உ)

## நாய்களுக்கு தடுப்பூசி

யாழ்ப்பாணம், ஜூன் 14
யாழ். மாநகராட்சிமன்றத்திற்குட்பட்ட பகுதியில் உள்ள வளர்ப்பு நாய்களுக்கு விசர் நோய்த் தடுப்பூசி மருந்து போடப்பட்டு வருகிறது.

இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணி முதல் 4 மணி வரை வண்ணார்பண்ணை ஐயனார் கோயிலடி சனசமூக நிலையத்தில் வைத்து தடுப்பூசி போடப்படும். (உ-162)

## மத்திய வங்கி ஊழியர்கள் நடவடிக்கை

கொழும்பு, ஜூன் 14
இலங்கை மத்திய வங்கி ஊழியர்கள் நேற்று முதல் தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர் என்று அறிவிக்கப்படுகிறது.

பதவி உயர்வு பற்றிய பிரச்சினை தீர்க்கப்படாததைத் தொடர்ந்தே, மத்திய வங்கி ஊழியர்கள் மேலதிக நேர வேலை செய்வது இல்லை என்று தீர்மானித்துள்ளனர்.

இந்த தொழிற்சங்க நடவடிக்கை தீவிரமடையின், பண நோட்டுகளை விநியோகிக்கும் பணி விதம்பிதம் அடைந்து, பொதுமக்களுக்கு அசௌகரியத்தை ஏற்படுத்தலாம் என்று தெரிய வருகிறது. (உ-எ-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேராசிரியர் துரைராசா மறைவுக்கு
# பலதுறை மக்களும் நினைவழியா அஞ்சலி

## உள்ளங்கவர்ந்த மாமனிதர்

அமரர் மாண்புமிகு உபவேந்தர் அ. துரைராசா அவர்களின் மறைவு ஈழத்தில் ஈடு செய்யமுடியாத பேரிழப்பாகும். எல்லோர் உள்ளங்களையும் கவர்ந்து வாழ்ந்த மாமனிதர், யாம் அவர்க்காற்றும் கைமாறு எதுவெனினும் நிறைவுறாது. அன்னாரின் ஜீவாத்மா நித்தியானந்த சாந்தி நிலை எய்த வேண்டுமென நாமெல்லாரும் இறைவன் திருவருளை உளமார வேண்டி மனமாரப் பிரார்த்திப் போமாக.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

— ஸ்ரீலஸ்ரீ குரு மகாசன்னிதானம்,
நல்லை ஆதீனம்.

## தமிழ் மக்களுக்கு பேரிழப்பு

பேராசிரியர் அ. துரைராசா அவர்களின் மறைவு கேட்டு பேரதிர்ச்சி கொள்கின்றோம். இவரது பிரிவு அனைத்து மக்களுக்கும் குறிப்பாக தமிழ் மக்களுக்கும் பேரிழப்பாகும். இடர்பாடுகள் நிறைந்த இக்காலத்தில் யாழ் பல்கலைக்கழகத்தை விரிவுபடுத்தி புதிய துறைகளை ஆரம்பித்து சர்வதேச மட்டத்தில் யாழ். பல்கலைக்கழகத்தை அறிமுகப் படுத்தியவர் இவர்.

அதுமட்டுமல்லாமல் தமிழ் மக்களின் துயர் துடைக்கும் பணியில் பல பொதுநல அமைப்புகளுக்கூடாக பணியாற்றியவர். எந்நிலையிலும் இந்த மண்ணை நேசித்தவர். பேராசிரியர் துரைராசா அவர்கள் தென்னிந்திய திருச்சபையின் சமூக, இலக்கிய பணிகளில் அதிக ஈடுபாடு கொண்டவர். இவர் தொடங்கிய, செய்த பணிகளைத் தொடர்ந்து செய்வதே நாம் அவருக்கு செலுத்தும் அஞ்சலியாகும். இவரது பிரிவால் துயருறும் குடும்பத்தினர் அனைவருக்கும் எங்கள் அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

வண. அ. ஜெயக்குமார்
(தென்னிந்திய திருச்சபை ஆயர் சார்பாக)

## தன்னலங் கருதா உத்தமர்

அமரர் பேராசிரியர் துரைராசா தன் அன்பாலும், பண்பாலும் கல்விமான்கள், மாணவர்கள் மாத்திரமன்றி ஒவ்வொரு தமிழ் மகனினதும் அன்புக்குரியவராய் இதயங்களில் குடி கொண்ட உத்தமராவர். உலகம் போற்றும் கல்விமானாக இருந்தும் அவரின் எளிமைத் தன்மையும், நடத்தையுமே எல்லாவற்றிற்கும் மேலாக அவருக்கு புகழை தேடிக் கொடுத்தது.

இவர் துணைவேந்தராக இருந்த காலப்பகுதியில் எமது பல்கலைக் கழகத்திற்கு இவர் ஆற்றிய சேவை அளப்பரியதாகும். பல்கலைக்கழகம் இயங்க முடியாத இக்கட்டான சூழ்நிலை இருந்த காலப்பகுதியில் தன்தனிப்பட்ட அயராத முயற்சியாலும், தன்னலம் பாராத சேவையாலும் பல்கலைக் கழகத்தை இயங்க வைத்தமை அவரது வரலாற்று சாதனையாகும்.

எத்தனையோ சுக போகங்கள் கிடைக்கக் கூடிய வசதியிருந்தும் மக்களோடு மக்களாக தானும் நின்று சாதாரண ஒரு குடிமகன் பெறும் வசதிகளை அனுபவித்துக் கொண்டு தொண்டாற்றியமை மாணவ சமுதாயத்தில் மாத்திரமன்றி தமிழ் மக்கள் அனைவராலும் போற்றப்பட்ட ஒன்றாகும்.

இவரின் இழப்பு மாணவர் சமுதாயத்திற்கும் தமிழ் சமுதாயத்திற்கும் பேரிழப்பாகும்.

—யாழ். பல்கலைக் கழக மாணவர்கள் ஒன்றியம்.

## தமிழீழத்தின் சொத்து!

"தமிழீழ தேசம் விடுதலைக்காக துடித்துக் கொண்டிருந்த போது பல கல்விமான்கள் இந்நாட்டை விட்டு வெளியேறினர். ஆனால் எம் சிந்தனைக்கு இனியவரும், சிறப்புக்கு எளியவருமான பேராசிரியர் அ. துரைராசா எமது மண்ணில் இருந்து கொண்டு, பேரினவாத ஸ்ரீலங்கா அரசின் அடக்குமுறைகள், பல்வேறு தடைகள், போரிலான சூழ்நிலைகளுக்கு மத்தியிலும் தளர்ந்து விடாமல் உறுதியோடு நின்று தமிழீழ தேசத்தின் விடிவுக்காகவும் உயர் கல்விக்காகவும், சமூக மேம்பாட்டிற்காகவும், அறிவியல் ரீதியான சிந்தனைகளை வளர்த்தெடுக்கவும், தன்னை முழுமையாக அர்ப்பணித்த தேச அபிமானியாவர்.

எமது தேசத்தின் சொத்தான அவர் எமது தேசத்தை நிர்மாணிக்க பெரும் அவாக் கொண்டிருந்ததார்"

—வெகுஜன அமைப்புகள் ஒன்றியம்.



பேரொளியாய்
சுடர்க
பேராசான்
புகழ்



## எங்கள் துரையே..

முகமும் மனமும்
சொல்லும் செயலும்
மணியாய் இசைந்த
மகாநுபவ,
எங்கள்
நெஞ்சுள் நெருங்கிய
தலைவா,

கொழும்பு
செல்லத்தானே
பிரியாவிடை தந்தோம்
மீண்டு
பெருநிழலாய் எங்களுக்கு
வாழ்வுதர வந்திடுங்கள்
என்று சொல்லித்தானே
செல்லவிட்டோம்-

இன்று......
எங்கள் துரை
பாடை வரும்
செய்தியிலே
இடி வீழாதோ...!

ஊனினை உருக்கி
உலகுக்கு ஒளியான
உன்னதனே!
எங்கள்
துணைவேந்தே,
துரைவேந்தே!!
உங்கள்
பொன்னடிகள்
போற்றி போற்றி ஐயா!

என். சண்முகலிங்கன்

## மண்ணையும் மக்களையும் நேசித்த பேராசான்

"தமிழினத்தின் தலை சிறந்த கல்விமான்களின் ஒருவரும், யாழ். பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தருமான பேராசிரியர் அ. துரைராசாவின் மரணச்செய்தி கேட்டு மிகவும் வேதனையடைகிறோம்:

யாழ்ப்பாணத்தில் அவர் பணியாற்றிய காலம் பல்வேறு இன்னல்களும், இடர்களும் நிறைந்த காலம். தூரதரிசன வீச்சுடனும், நம்பிக்கை நிறைந்த திடமான மனத்துடனும் பணியாற்றிய இந்த பேராசான் பல்கலைக்கழக வரம்புக்குள் தனது பணியை நிறுத்தாது பொதுப் பணிகளிலும், சமூக பணிகளிலும் அயராது ஈடுபட்டு உழைத்தார்.

மக்களின் நலனையும், உயர்வையும், வளர்ச்சியையும் மனதில் கொண்டு எமது ஆலயத்தை மையமாகக் கொண்டு இயங்கிய பிரஜைகள் குழுவில் தளராத உறுதியுடனும், நிதானமான, நியாயமான சிந்தனையுடனும் பங்கெடுத்து பணியாற்றினார்

தமிழினம் இன்னலுறும் இவ் வேளையில் மண்ணையும், மக்களையும் மனதார நேசித்த இந்த மாமனிதனின் மரணம் தமிழினத்துக்கு ஈடு செய்யமுடியாத இழப்பாகும்.

இவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை கூறிக் கொள்வதுடன் அன்னாரின் ஆன்மா ஆண்டவனின் சந்நிதியில் ஆறுதலடைய வேண்டும் என்று இறைவனை இரந்து மன்றாடுகிறோம்".

— பேரருட்திரு கலாநிதி தோமஸ் சவுந்தரநாயகம்,
யாழ். மறைமாவட்ட ஆயர்.

## சமூகப் பணிக்கு தம்மையே அர்ப்பணித்த பெருமகன்

பேராசிரியர் துரைராசா நமது சமுதாயத்தின் மிக நெருக்கடியான காலகட்டத்தில் துணைவேந்தர் பதவியை ஏற்று மிகவும் நிதானமாகவும் திறமையுடனும் தமது பணியை மேற்கொண்டு புகழீட்டியவர்.

துணைவேந்தராகக் கடமையாற்றிய காலகட்டத்தில் தமது கடமையில் தமது முழுப்பொழுதையும் ஈடுபடுத்ியது மட்டுமன்றி ஏனைய பல்கலைக்கழகங்களின் துணைவேந்தர்களுக்கு அளிக்கப்பட்டவை போன்ற வசதிகளைக் கூடப் பயன்படுத்தாது தமது மக்களுடைய வசதியீனங்களிலே தாமும் பங்கெடுக்க வேண்டுமென்று மிகவும் ஆணித்தரமாக நம்பியவர்!

இவரது பதவிக்காலத்தில் நமது பல்கலைக்கழக வளர்ச்சிக்காகப் பல புதிய திட்டங்கள் முன்வைக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டன. இவர் தொடக்கி வைத்த கல்வி நெறிமுறைகள் இப்பல்கலைக்கழக வளர்ச்சியில் இவருக்கிருந்த கரிசனையைத் துலாம்பரப்படுத்துகின்றன.

ஒரு பல்கலைக்கழகத்திற்கு மேன்மை தருவது வெறும் கட்டடங்களும் கற்கை நெறிகளுமல்ல என நம்பிய இவர் தமது ஆளுமையைப் பயன்படுத்தி பல்கலைக்கழக ஆய்வுகளும் வெளியீடுகளும் சிறப்பான இடத்தினைப் பெறுவதற்கு வழி சமைத்தார். அது மட்டுமன்றி நமது அறிஞர்கள் வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களுடன் இணைந்து அங்கு சென்று ஆய்வு நடத்தவும் பட்டம்பெற்று வரவும் இவர் பெரும் முயற்சிகள் எடுத்தார்.

எளிமையான தோற்றம் எல்லோருடனும் அன்பாகப் பழகும் சுபாவம், நலிந்தவர்களின் மேம்பாட்டில் காட்டும் அக்கறை தனது சொந்தச் சுகத்திற்கு மேலாக சமூகப்பணியையே மேலாகக் கருதும் அர்ப்பணிப்பு மனப்பான்மை போன்ற குணாதிசயங்கள் மற்றவர்களின் அன்பையும் ஆதரவையும் அவர்பால் ஈர்த்தன.

தலைசிறந்த கல்விமானும் மனிதநேயம்மிக்க ஒரு சமூக சேவையாளருமான அன்னாரின் மறைவு யாழ். பல்கலைக் கழகத்திற்கு மட்டுமன்றி தமிழ்ச் சமுதாயம் முழுவதற்குமே ஒரு பேரிழப்பாகும்.

— பேராசிரியர் க. குணரத்தினம்
உபவேந்தர். யாழ். பல்கலைக்கழகம்.

## அளவிலாத பெருமையர்

பேராசிரியர் அ. துரைராசா அலையடங்கிய சமுத்திரம் போல கல்வித்துறையில் ஆழமான ஒருவர் பேராசிரியர் அ. துரைராசா உலக அரங்கில் நல்லதொரு கல்வி முத்திரையை பொறித்துச் சென்றுள்ளார்.

—ஆசிரியமணி அ. பஞ்சாட்சரம்
பண்டிதமணி நூல்வெளியீட்டுச் சபைச்செயலாளர்.


சாவே - நீ
சாகமாட்டாயா!



அமரர் பேராசிரியர் அ. துரைராசா

ஐயனே : போய் வா

சிவமலரும் - டிவகலாலாவும்;
பிள்ளைகளும்.

86, கொழும்புத்துறை வீதி.
யாழ்ப்பாணம்.

[இ-8696]


## ஆசிரியர்களுக்கு வெள்ளப்பாதிப்பு முற்பணம்

அச்சுவேலி, ஜூன் 14

ஆசிரியர்களுக்கு ஆயிரம் ரூபா வெள்ளப்பாதிப்பு முற்பணம் இம்மாதச் சம்பளத்துடன் வழங்கப்படவுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

முற்பணம் பெறுவதற்கான தனித்தனி விண்ணப்பங்களை கிராம சேவையாளர் மற்றும் பிரதேச செயலாளர் ஆகியோரின் சிபார்சுடன் கோட்டக்கல்வி அலுவலகத்திற்கு அனுப்பி வைக்க வேண்டும் என்று ஆசிரியர்கள் கோரப்பட்டுள்ளனர். (எ-11)

## பாவனைக்குதவாத பிஸ்கற் வகைகள் கண்டுபிடிப்பு

சாவகச்சேரி, ஜூன் 14

காலங்கடந்த — பாவனைக்குதவாத பிஸ்கற் வகைகள் சாவகச்சேரி நகர கடைகளில் விற்பனைக்கு இருந்து கண்டு பிடிக்கப்பட்டன.

நகர சுகாதார பரிசோதகர் கிளின்ரஸ், கடந்த வாரம் மேற்கொண்ட பரிசோதனையின் போது இவ்வாறான [illegible]


கண்ணீர் பூக்கள்

மலர்வு: 10 — 11 — 1934

உதிர்வு: 11 — 06 — 1994



அமரர்
பேராசிரியர் அழகையா துரைராசா
(முன்னாள் துணைவேந்தர் யாழ். பல்கலைக்கழகம்)

ஆடிய அலைகள் ஓய்ந்து போயின
ஓடிய கால்கள் சாய்ந்து போயின
தேடிய நெஞ்சங்கள் தேம்பி யழுகின்றன
வாடிய விழிகள் வழி தடுமாறுகின்றன.

சமூக விஞ்ஞான மன்றம்,
பொருளியற்றுறை,
யாழ் பல்கலைக்கழகம்.

[31895]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

### விற்பனைக்குண்டு

ஒரு கிழமை சேவல் குஞ்சுகளும், இறைச்சிக் கோழியும் விற்பனைக்குண்டு. இடம் விக்கினேஸ்வரா டிஸ்பென்ஸரிக்கு முன்னாலும் பெற்றோல் செற்றுக்கு அருகிலும்: K. K. எஸ். றோட், கன்னாதம். (7232)

### EASY ENGLISH

ஆங்கிலம் இலகுவில் கற்க, கற்பிக்க T. M. அன்ரனிப் பிள்ளை LL. B. எழுதிய "ஈசி இங்கிலீஷ்" (Easy English Part - I, V) தொகுப்பு பெரும் துணை புரியும் ஆசிரியரின் புதிய வெளியீடாக "ஈசி லற்றின் எக்ஸ்பிறசன்ஸ்" (Easy Latin Expressions) ஆங்கிலம், தமிழ்மொழி பெயர்ப்புடன் வெளிவந்துள்ளது. எங்கும் பெற்றுக் கொள்ளலாம். (31362)

### புதிய வகுப்புகள்

Yogi Home Science Academy 15-6-94 புதன்கிழமை முதல் Cookery, Cake Icing, Fondant Icing Sugar Flowers, Make up and Hair Dressing புதிய வகுப்புக்கள் ஆரம்பமாக உள்ளன. விரும்பியவர்கள் உடன் தொடர்பு கொள்ளவும். 71B, நாயன்மார் வீதி, கச்சேரி நல்லூர் றோட் நல்லூர், யாழ்ப்பாணம். (31359)

### இலகு திருமண சேவை

31 வயது, மிருகசீரிடம், உதயச் செவ்வாய், கனிஷ்ட தொழில்புரிபவருக்கு மணமகள் சுவிஸில் தேவை. விரும்பிய மணமக்கள் தெரிவிற்கு நாடுங்கள். தொடர்பு: ஞாயிறு காலை. து. விமலா யாழ். நாச்சிமார் கோயிலடி. (31389)

### அக்கரைச் சீமையில்

ஆயிரம் பாத்திரங்களைப் படைத்த அராலியூர் ந. சுந்தரம்பிள்ளையின் நாவல். இங்கிலாந்து சென்ற எங்கள் இளைஞர்களின் கதை. வெளிநாடு செல்ல விரும்பும் பெண்கள் எல்லோரும் வாசிக்க வேண்டிய நாவல். (31016)

### தவறிவிட்டது

சிவகுலரஜனி ஆகிய எனது அடையாள அட்டை (667861276 V) வேம்படி பாடசாலை பற்சிகிச்சை நிலைய அடையாள அட்டை ஆகியன மானிப்பாய் ஆஸ்பத்திரிக்கும் தியாகசிலத்திற்கும் இடையில் 7-6-94 அன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் 174/7, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் முகவரியில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். (7448)

## ஐ. தே. க வேட்பாளர் கடத்தப்பட்டார்

கொழும்பு, ஜூன் 14

வாகரை பிரதேச சபைக்கு ஐக்கிய தேசியக்கட்சி வேட்பாளராகப் போட்டியிட்ட செல்வம் காசிமுத்து என்பவர் இராணுவ பட்ணி சீருடை தரித்த நான்கு பேரினால் கடத்திச் செல்லப்பட்டார் என்று தெரிவிக்கப்படுகிறது.

கடந்த 30 ஆம்திகதி காலை இச்சம்பவம் இடம் பெற்றதாக காசிமுத்துவின் மனைவி பொலிஸாருக்கு முறைப்பாடு செய்துள்ளார். (இ-எ)

## ஷெல் தாக்குதலில் காயமுற்ற மற்றொருவர் பலி!

குருநகர், ஜூன் 14

கடந்த சனிக்கிழமை அதிகாலை குருநகர் பகுதியில் நடத்தப்பட்ட ஷெல் தாக்குதலில் படுகாயமடைந்த மற்றொருவரும் பலியானார்.

யோசெப் சில்வஸ்டர் சிலுவை (வயது 70) என்பவரே சனிக்கிழமை இரவு யாழ். ஆஸ்பத்திரியில் பலியானார்.

இவருடன் அன்றைய ஷெல் வீச்சுக்குப் பலியானவர்களின் எண்ணிக்கை நான்காக அதிகரித்துள்ளது. [உ-51]

---

# நீர்ப்பாசன தொழில்நுட்பவியலாளர்கள் உடன் தேவை

தாயக பொருண்மியத்தை வளர்க்கும் நோக்குடன் நாம் துரித நீர்வள மேம்பாட்டுத் திட்டத்தை அமுலாக்க உள்ளோம். இதை இனிது நிறைவேற்ற எமக்கு பின்வரும் அனுபவசாலிகள் உடன் தேவைப்படுகின்றனர்.

நீர்ப்பாசன பொறியியலாளர்கள்
நீர்ப்பாசன தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள்
நீர்ப்பாசன தொழில் மேற்பார்வையாளர்கள்
நீர்ப்பாசன படவரைஞர்கள்

தகைமையுடையவர்களுக்கு தகுந்த சம்பளம் வழங்கப்படும். பெருநிலப்பரப்பில் வேலை செய்ய தெரிவு செய்யப்படுபவர்களுக்கு மேலதிக ஊக்குவிப்பு பணமும் கொடுக்கப்படும்.

உங்கள் அனுபவம் பற்றிய சான்றிதழ்களுடன் எதிர்வரும் வியாழன் (16-06-94) அல்லது வெள்ளி (17 - 06 - 94) காலை 10 மணிக்கு கீழ் உள்ள விலாசத்தில் எம்முடன் தொடர்பு கொள்ளவும்.

உட்கட்டுமானப் பகுதி,
தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம்
இல, 10, செம்பியன் வீதி,
கொக்குவில்.

[இ-8449]

---

# மூன்றாவது ஆண்டு இதய அஞ்சலி



மண்ணில் மலர்வு: 13 - 08 - 1969

மண்ணிற்காய் உதிர்வு: 14 - 06 - 1991

## வீரவேங்கை ஜீவமலர்

(ஸ்ரீதுளசி கணேசசுந்தரன்)

முற்றாத மல்லிகை - உனக்காய்
பூத்துள்ளது - நீ
முழுமைக் கழிக்க வென - இணற்றடி
காத்துள்ளது.......

என்றும் நினது நீங்காத நினைவுடன்;
அப்பா, அம்மா.
சகோதர. சகோதரிகள்.

36A, அரச வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம், (31391)

---

# நான்காண்டு நிறைவுதன்னில் நீங்காத நினைவானாய்



அன்னையின் மடியில்: 05 - 01 - 1953

ஆண்டவன் அடியில்: 14 - 06 - 1990

## அமரர் புஷ்பரஞ்சனி பொன்னுத்துரை

"வியக்க வைக்கும் உன் சிரிப்பிற்கு
விலையில்லையம்மா!
விண்ணிறங்கி நீ வராமல்
விடிவில்லையம்மா!
வண்ணமலர் மாலையாக
உனைத்தேடுதம்மா - உன்
வடிவழகை காண எங்கள்
மனதும் ஏங்குதம்மா"

— குடும்பத்தினர்.

மகளிர் கல்லூரி வீதி,
சாவகச்சேரி. (31394)

---

95ஆம் ஆண்டு உயிரியல் பிரிவு மாணவி
து. புனிதாவின் தந்தையாகிய
யாழ். பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தரும்
பிரபல கல்விமானுமாகிய
அமரர்

# பேராசிரியர் துரைராசாவுக்கு எமது இதய அஞ்சலிகள்

அன்னாரின் மறைவால் துயருறும் குடும்பத்தினருடனும் அவரது அரும் பெரும் சேவையை இழந்துள்ள கல்விச் சமூகத்துடனும் நாமும் மீளாத்துயரை பகிர்ந்து கொண்டு அமரருக்கு எமது மனம் நெகிழ் இதய அஞ்சலிகளைக் காணிக்கையாக்குகிறோம்.

95 ஆம் ஆண்டு உயர்தர பிரிவு
மாணவிகள்,
யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தர -
பாடசாலை,
பருத்தித்துறை.

(31392)

---

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



இறைவன் படைப்பு: 21 - 12 - 1943

இறைவன் அழைப்பு: 15 - 05 - 1994

## அமரர் அ. இம்மானுவேல் ஜெயசிங்கம்

[மதுவரி அத்தியட்சகர், வவுனியா]

"வாழ்ந்தாலும் ஆண்டவருக்கென்றே வாழ்கிறோம்
செத்தாலும் ஆண்டவருக்கென்றே சாகிறோம்"
[உரோ-14:8]

இரக்கம் நிறைந்த பிதாவே! எம் குடும்பத் தலைவனாக இவ்வுலகில் வாழ்ந்து எம்மை விட்டுப்பிரிந்த உமது அடியான் அ. இம்மானுவேல் ஜெயசிங்கம் மனித பலவீனத்தால் செய்த பிழைகளை மன்னித்து அவரை உமது நித்திய பேரின்ப வீட்டில் சேர்த்தருள வேண்டுமென்று இரந்து மன்றாடுகிறோம்.

வவுனியா மதுவரி அத்தியட்சகரான அமரர் அ. இம்மானுவேல் ஜெயசிங்கத்தின் பூதவுடலை வவுனியாவில் இருந்து கரவெட்டியிலுள்ள அவரது இல்லத்திற்கு கொண்டுவர உதவிசெய்த வவுனியா மதுவரி உத்தியோகத்தர்களுக்கும், ஏனைய மதுவரி உத்தியோகத்தர்களுக்கும், யாழ்ப்பாணம் இலங்கை வங்கி உத்தியோகத்தர்களுக்கும், நண்பர்களுக்கும் ஏனைய உதவி செய்தவர்களுக்கும் மற்றும் ஆறுதல் கூறிய அனைவருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

இவரின் பிரிவால் துயருறும்;
அன்பு மனைவி, சகோதரர்கள்,
மைத்துனர்கள், பெறாமக்கள், மருமக்கள்,
உற்றார், உறவினர்கள்.

சரஸ்வதி வித்தியாலய வீதி,
கரவெட்டி. (31372)

---

# 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அவனியில்: 24 - 04 - 1917

அரனடியில்: 05 - 06 - 1992

## அமரர் கனகசபை கந்தையா

(சரவணை கிழக்கு-வேலணை)

உறுதியான உடலும், தளராத உள்ளமுமாய்; இறைபுகழ் பாடி எமக்கு உறுதுணையாக இருந்த எமது ஆருயிர்த் தந்தையே! உங்களின் ஆத்மா சாந்தியடைய என்றும் இறைவனை வேண்டிநிற்கின்றோம்.

உங்கள் பிரிவால் வாடும்;
அன்பு மனைவி மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(7447)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
292/2 நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

## சமூகத்துக்குள்ள முக்கிய பொறுப்பு

யுத்தம் காரணமாக கடந்த நான்காண்டு காலத்தில் குடாநாட்டில் பல்லாயிரக் கணக்கானோர் இடம்பெயர்ந்துள்ளனர்.

இவர்களில் அனேகமானோர் ஆரம்பத்தில் பாடசாலைகளிலேயே தங்க வைக்கப்பட்டிருந்தனர்.

பின்னர் இவர்களுக்கென தனியான குடிசைகள் அமைக்கப்பட்டன. அக்குடிசைகளுக்கு இவர்கள் இடம் மாற்றப்பட்டனர்.

அகதிகளில் சொற்ப எண்ணிக்கையினர் தவிர்ந்த அனேகமானோர் தற்போது இப்படியான குடிசைகளிலேயே வாழ்ந்து வருகின்றனர்.

நாளாந்த சீவியத்துக்கே வழியற்ற நிலையில் இவர்கள் வாழ்ந்து வருகின்றனர். பல கஷ்டங்களுக்கு மத்தியிலே இவர்களின் வாழ்க்கை கழிந்து கொண்டிருக்கிறது.

அடிப்படை சுகாதார வசதியீனங்கள் காரணமாக முகாம்களில் அடிக்கடி தொற்று நோய்கள் பரவி இந்த மக்களின் உயிரைப் பறித்து வருகின்றன.

போசாக்கின்மை இந்த அகதி முகாம்கள் எதிர் நோக்கும் மற்றொரு பிரச்சினை.

யுத்தம் நடைபெறும் நாடுகளில் மக்கள் இடம் பெயர்வதும் அகதிகளாவதும் சகஜமானதே. ஆனால் இவர்களுக்கான அடிப்படைத் தேவைகளை எவரும் தட்டிக் கழித்துவிட முடியாது. இதில் சமூகத்துக்குப் பெரும் பொறுப்பு உண்டு.

குடாநாட்டில் உள்ள பெரும்பாலான அகதி முகாம்களின் நிலைமை மிகவும் மோசமாக இருக்கிறது.

கிடுகினால் வேயப்பட்ட கூரைகள் உக்கி உருக்குலைந்து போயுள்ளன. அனேகமான குடிசைகள், உள்ளே இருந்து அண்ணாந்து பார்த்தால் நீல வானம் தெரிகிறது!

மாரிகாலம் ஆரம்பமாவதற்கு முன்னர் இக்குடிசைகள் திருத்தப்படவேண்டும். திருத்தப்படாவிட்டால் நிலைமை மேலும் மோசமடையலாம்.

ஒரு சில அரசசார்பற்ற நிறுவனங்கள் இருந்து கொண்டு பல்லாயிரக்கணக்கான அகதிகளைப் பராமரிப்பது சுலபமான காரியமல்ல.

இந்தியாவில் இருந்து அகதிகளை பலவந்தமாக இங்கு அனுப்பி வைக்கும் முயற்சியும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அதே சமயம் குடாநாட்டில் ஷெல், பீரங்கித் தாக்குதல்கள் நாளாந்தம் சகஜமாகி வருவதால் அகதிகளின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்குமே தவிர குறைவதற்கு வாய்ப்பில்லை.

இந்த அகதிகளுக்கு உதவுவதற்கு அரசசார்பற்ற நிறுவனங்கள் வலிமிழந்த நிலையில் தற்போது அரச அதிபர் அரசாங்கத்தின் உதவியை நாடி இருக்கிறார்.

அகதி முகாம்களைத் திருத்துவதற்குத் தேவையான ஒரு தொகைப் பணத்தை வழங்க திறைசேரியின் இணக்கம் பெறப்பட்டுவிட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

மிகவும் நெருக்கடியான ஒரு கட்டத்தில் இந்த உதவியைப் பெறுவதில் அவர் வெற்றி கண்டுள்ளார்.

திறைசேரி வழங்க உள்ள நிதி கைக்கு வந்த பின்னரே போதுமானதா என்பது தெரியவரும்.

ஆனால், அரசசார்பற்ற நிறுவனங்களும் கைவிட்ட நிலையில் அரசாங்கமும் உதவி செய்ய மறுத்தால் அகதிகளின் நிலை என்ன என்பதே இன்றைய கேள்வி.

இந்த அகதிகளில் பெரும்பாலானோர், இராணுவ நடவடிக்கைகளுக்கு பயந்து தமது சொத்துக்களை இழந்து, பாதுகாப்பான இடங்களை நாடி வந்தவர்கள். இவர்களுக்கு உதவுவது சமூகத்தில் உள்ள ஒவ்வொருவரினதும் கடமை ஆகும்.

அரசாங்கத்திடமோ அல்லது அரசசார்பற்ற நிறுவனங்களிடமோ இந்த அகதிகள் முழுமையாகத் தங்கி இருப்பது சொந்த மக்கள் இவர்களை முற்றாக ஒதுக்கி வைத்ததுக்கு ஒப்பானது. இதனை மனதில்கொண்டு ஒவ்வொருவரும் இயன்றளவில் உதவுவது அவசியம் ஆகும்.

# ஈழத்தமிழர்கள் தாயகம் திரும்ப பாதுகாப்பு சூழ்நிலை உண்டா?

## ஐரோப்பிய சமூக நாடுகள் கேட்கின்றன

யாழ்ப்பாணம், ஜூன் 14

ஐரோப்பிய நாடுகளில் உள்ள இலங்கைத் தமிழர்கள் தாயகம் திரும்பக்கூடிய பாதுகாப்பான சூழ்நிலை ஏற்பட்டுள்ளதா என்று ஐரோப்பிய சமூக அமைப்பு நாடுகள் அகதிகளுக்கான ஐ. நா. தூதரகத்தை கேட்டுள்ளன.

யாழ்ப்பாணம் வந்துள்ள ரெட்பானா அமைப்பின் தலைமையக திட்ட அதிகாரி திரு. மாரீகுஸ் ஆக்ஸ்லாண்ட் மேற்கண்ட தகவலை உதயனுக்கு தெரிவித்தார்.

மேற்கு நாடுகளில் தஞ்சம் புகுந்துள்ள இலங்கைத் தமிழர்களை நாடுகடத்தும் வகையில் அந்நாடுகள் நடவடிக்கை எடுப்பது போன்று நோர்வேயும் நாடுகடத்த நடவடிக்கை எடுக்குமா என்று அவரிடம் கேட்ட சமயமே மேற்கண்டவாறு அவர் கருத்து வெளியிட்டார்.

தஞ்சம் புகுந்த இலங்கை தமிழர்கள் நாடு திரும்பி இங்கு வாழக்கூடிய பாதுகாப்பு நிலை ஏற்பட்டுள்ளதா? என்று ஐரோப்பிய சமூக நாடுகள் அகதிகளுக்கான ஐ. நா. தூதரகத்திடம் கேட்டுள்ளன.

அகதிகளுக்கான ஐ. நா. தூதரகம் தயாரித்து வழங்கவிருக்கும் அறிக்கையைப் பொறுத்தே அகதிகள் திருப்பி அனுப்பப்படுவார்களா? இல்லையா? என்பது குறித்து முடிவு செய்யப்படும் அந்த முடிவை நோர்வேயும் பின்பற்றும் — என்றார் அவர்.

## சிரட்டைக் கரி உற்பத்தி வன்னியில் ஆரம்பமாகிறது

யாழ்.மாவட்டத்தில் அதிகரித்துள்ள சிரட்டைக்கரிப்பாவனைக்கு ஈடுகொடுக்கும் முகமாக வன்னிப் பெருநிலப்பரப்பில் சிரட்டைக்கரி உற்பத்தி செய்வதற்கான நடவடிக்கைகளை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினர் மேற்கொண்டு வருகின்றனர்.

தற்பொழுது யாழ். குடாநாட்டில் ஆக்ஸிஜாயு மற்றும் தேவைக்கான எரிசக்தியாக சிரட்டைக்கரி பயன்படுத்தப்படுவதைத் தொடர்ந்து இதன் விலை தற்போது கிலோ 38 ரூபா வரை விற்கப்படுகிறது. பெருநிலப்பரப்பில் மேற்கொள்ளப்பட்டுவரும் சிரட்டைக்கரி உற்பத்தி சந்தைக்கு வந்ததும் இதன் விலையில் வீழ்ச்சி ஏற்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## அரசியலில் நிரந்தரமான நண்பரோ, எதிரியோ இல்லை

### அனுபவசாலி தொண்டா கூறுகிறார்

கொழும்பு, ஜூன் 14

அரசியலில் நிரந்தர நண்பர்களும் இல்லை, நிரந்தர எதிரிகளும் இல்லை.

அமைச்சர் தொண்டமான் கொட்டகலையில் நடந்த கூட்டம் ஒன்றில் பேசியபோது முன்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

மாற்றத்திற்கு ஏற்றவாறு நாம் நம்மை மாற்றிக் கொள்ளவேண்டும். மாற்றம் என்கிறபோது நேற்று எதிரிகளாக இருந்தவர்கள் இன்று நண்பர்களாவார்கள். இதனை அனைவரும் புரிந்துகொள்ளவேண்டும்.

நமது மக்களுக்கு நன்மை செய்கின்றவர்கள் யாராக இருந்தாலும் அவர்களோடு பேசித் தீர்வு காணுவதே எமது நோக்கமாகும்.

சிங்கள மக்களுக்கு என்ன என்ன உரிமைகள் இந்த நாட்டில் இருக்கின்றனவோ அவற்றை எல்லாம் எமது மக்களும் அனுபவிக்கவேண்டும். அந்த வழியில் தான் நாம் பல உரிமைகளையும் பெற்றோம். இடையில் நமக்குள்ளேயே புல்லுருவிகளால் சில முட்டுக்கட்டைகள் ஏற்பட்டன

—இவ்வாறு அமைச்சர் தொண்டமான் கூறினார்.

[ஒ-எ]

## நாட்டின் ஜனாதிபதியான! 1 ஆவது கிராமவாசி நானே

### டி. பி. விஜேதுங்க பெருமிதம்

கொழும்பு, ஜூன் 14

கிராமப்புற வீடு ஒன்றில் பிறந்து நாட்டின் நிறைவேற்று ஜனாதிபதியாகப் பதவி வகிக்கும் முதலாவது ஆள் நானே!

ஜனாதிபதி விஜேதுங்க முன்கண்டவாறு கூறினார்.

ஜனசக்தியின் 5 ஆவது சுற்று விதியோகத்தை உடுநுவரையில் உள்ள தமது பாரம்பரிய வீட்டில் வைத்து ஜனாதிபதி ஆரம்பித்து வைத்துப் பேசினார். அப்போது அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் சொன்னதாவது;

நாடு சுதந்திரம் அடைந்த பின்னர் நாட்டின் தலைவர்களாக வந்தவர்கள் பலரக வீடுகளில் பிறந்து இருந்தார்கள்.

முதலாவது பிரதமர் போத்தலே வளவில் இருந்து வந்தார். பின்னர் கண்டாவளையில் இருந்து பிரதமர் ஒருவர் தோன்றினார். அதன் பின்னர் ஹொர கொல்லையில் பிறந்தவர் பிரதமரானார்; மீண்டும் நாட்டின் தலைமை போத்தலவையில் இருந்து ஹொரகொல்லைக்குச் சென்றது; பின்னர் சேதவத்தையில் இருந்து செல்வந்தை சென்றது.

வளவுகளில் இருந்து நகரங்களுக்குச் சென்ற இந்த வரிசையை நான்தான் முதல் தடவையாக மாற்றியமைத்தேன் — என்று ஜனாதிபதி தெரிவித்தார். (எ)

## சிங்களவருக்கு பாதிப்பு இன்றி தமிழருக்கு உதவ நடவடிக்கை

### சந்திரிகா தகவல்

கொழும்பு, ஜூன் 14

பெரும்பான்மையினரின் உரிமைகளுக்குப் பாதகம் ஏற்படாத வகையில் சிறுபான்மையினரின் வேண்டுகோளுக்கு இணங்கிச் செயற்படுவதற்கு நாம் திட்டமிட்டுள்ளோம்.

மேல் மாகாண முதலமைச்சரும் சுதந்திரக் கட்சியின் பிரதித் தலைவருமான சந்திரிகா குமாரணதுங்கா முன்கண்டவாறு தெரிவித்தார்.

பொது மக்கள் ஐக்கிய முன்னணி மேல்மாகாண சபை ஆட்சியைப் பொறுப்பேற்று ஓராண்டு பூர்த்தியடைந்ததை ஒட்டி களனி ஹுணுப்பிட்டி ஜயந்தி சந்தியில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் பேசிய போது அவர் இவ்வாறு தெரிவித்தார்:

அவர் மேலும் சொன்னதாவது;

வடக்கு-கிழக்கு யுத்தத்துக்கு அரசு பெருந்தொகைப் பணத்தைச் செலவு செய்து வருகின்றது. இதனால் சுகாதாரம், கல்வி போன்ற அத்தியாவசிய தேவைகளுக்கான செலவினம் குறைக்கப்படுகிறது. இந்த நிலையில் அரசினால் வடக்கு-கிழக்கு யுத்தத்துக்கு தீர்வு கண்டுவிட முடியாது.

இனப்பிரச்சினைக்கு உண்மையானதும் தெளிவானதுமான தீர்வு சுதந்திரக் கட்சி தலைமையிலான அரசாங்கத்தின் மூலம் மட்டுமே கிடைக்கும்.

தமிழ் மற்றும் முஸ்லிம் மக்களின் உரிமைகளை வழங்கும் திட்டம் ஒன்று எம்மிடம் உண்டு. இப்போது அதனைத் தயாரித்து வருகின்றோம்.

இந்த யுத்தத்தை மேலும் நீடிக்கும் நோக்கம் எமக்கு இல்லை'' — என்றும் அவர் சொன்னார். (எ)

வளமான வாழ்வு பெற- ஏர்க்களம் நாம் சென்றிடுவோம்

## புலிகளின் குரல் வானொலியில்

14 - 06 - 1994

செவ்வாய் இரவு

★ 8-01 — ஊர்சுற்றும் ஒலிவாங்கி
★ 8-10 — அறிந்துகொள்ளுங்கள் - தகவல் களஞ்சியம்
★ 8-20 — நலந்தானா ''கண்நோயும் அதோடு சம்பந்தமான ஆபத்துக்களும்''
★ 8-30 — செய்திகள்
★ 8-40 — கருத்துகளம் - ''சுறுசுறுப்பு''
★ 8-50 — களமும் காலமும் - மன உறுதி

15 - 06 - 1994

புதன் காலை

★ 7-02 — மாவீர வணக்கம்
★ 7-15 — நீங்கள் கேட்டவை
★ 7-30 — செய்திகள்
★ 7-35 — பத்திரிகைச் செய்திகள்
★ 7-40 — நீங்கள் கேட்டவை நிகழ்ச்சியின் தொடர்ச்சி

## வானொலியில் கல்விச் சேவை

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம். முதல் தடவையாக கல்விச் சேவைக்கென தனியான (எப். எம்) பண்பலைச் சேவையை இம் மாதம் 22ஆம் திகதி ஆரம்பிக்கிறது.

தினமும் காலை 5 30 மணிக்கு ஆரம்பமாகும் இந்த ஒலிபரப்பு 18 மணித்தியாலங்கள் நடைபெறும்.

தமிழ், சிங்களம், ஆங்கில மொழிகளில் போதனை இடம்பெறும் என்று அறிவிக்கப்படுகிறது. [ஒ-எ]

## ஜனாதிபதி 18 ஆம் திகதி கிழக்கு விஜயம்

கொழும்பு, ஜூன் 14

ஜனாதிபதி விஜேதுங்க எதிர்வரும் 18 ஆம் திகதி அம்பாறைக்கு விஜயம் செய்யவிருக்கிறார்.

ஜனாதிபதியின் வடக்கு—கிழக்கு விஜயத்தின் முதல் கட்டமாக இது அமைகிறது. ஜூலை 2இல் வவுனியாவுக்கும் 9இல் திருமலைக்கும் அவர் விஜயம் செய்யத் திட்டமிட்டுள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது. (ஒ—எ)

## 2 வேங்கைகள் வீரச்சாவு

யாழ்ப்பாணம், ஜூன் 14

அம்பாறை மாவட்டம் விநாயகபுரம், பாலக்குடா என்னும் இடத்தில் ஸ்ரீலங்கா இராணுவத்துடன் ஏற்பட்ட திடீர் மோதலில் விடுதலைப் புலிகள் போராளிகள் இருவர் வீரச்சாவடைந்தனர்.

கடந்த வியாழன் நண்பகல் 12-30 மணியளவில் விடுதலைப் புலிகளின் முகாமை இராணுவம் சுற்றிவளைக்க முற்பட்ட போது இம்மோதல் ஏற்பட்டது.

அம்பாறையைச் சேர்ந்த வீரவேங்கை மனோகரன் என்றழைக்கப்படும் கந்தசாமி தங்கராசா, வீரவேங்கை செங்கோலன் என்றழைக்கப்படும் கண்ணப்பர் நவநாயகமூர்த்தி ஆகியோரே வீரச்சாவடைந்தனர். (உ-எ)

## 15 ஆயிரம் இரட்டைக்கூட்டடுப்பு கட்டும் திட்டம்

இந்த ஆண்டு யாழ் மாவட்டத்திற்குட்பட்ட பகுதிகளில் 15 ஆயிரம் சிக்கன இரட்டைச் சூட்டடுப்புகளை கட்டி முடிக்கும் திட்டம் ஒன்றினை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு சக்திப் பகுதியினர் மேற்கொண்டுள்ளனர்.

இதற்காக மாவட்டத்தில் உள்ள ஒவ்வொரு உற்பத்திக் குழுப்பகுதியிலும் குறைந்தது 50 அடுப்புகள் என்ற எண்ணிக்கையில் இந்த அடுப்புகள் கட்டப்படுவதோடு வசதி [illegible] கட்டியிலும் இவ்வாறான அடுப் [illegible] பட்டுள்ளது. (எ)

## சாரணர் தருசின்னப் பயிற்சி இம்முறை யாழ்ப்பாணத்தில்

சாரணர் தலைவர்களுக்கான அதியுயர் பயிற்சிநெறியான தருசின்னம் (அலந்தை நான்கு) பயிற்சி பல வருடங்களுக்குப் பின்னர் யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் ஆகஸ்ட் 10 ஆம் திகதி தொடக்கம் 16 ஆம் திகதி வரை குருளைச் சாரணர் தலைவர்களுக்கான பயிற்சியும் —

ஆகஸ்ட் 18 ஆம் திகதி தொடக்கம் 26 ஆம் திகதி வரை சாரணர் தலைவர்களுக்கான பயிற்சியும் வைதீஸ்வரா வித்தியாலய பாடசாலையில் நடைபெறும்.

இப் பயிற்சிகளுக்கு விண்ணப்பிப்பதற்குரிய படிவங்கள் கொழும்புத் தலைமைக் காரியாலயத்திலிருந்து கிடைத்துள்ளதாக, யாழ் மாவட்ட பயிற்சி ஆணையாளர் திரு. இ. தவயோபா தெரிவித்தார்.

யாழ் மாவட்டத்தைச் சேர்ந்த சாரணர்கள் இப் பயிற்சியைப் பெறுவதற்காக தென்னிலங்கைக்குச் செல்வதில் உள்ள சிரமங்களைத் தவிர்க்கும் பொருட்டு தலைமைக் காரியாலய அதிகாரிகளிடம் கஷ்டங்களை விளக்கி பயிற்சியை இங்கே நடத்துவதற்கு அனுமதி பெறப்பட்டதாகவும் அவர் மேலும் கூறினார்.

இச் சந்தர்ப்பத்தை இங்குள்ள சாரணர்கள் தக்கபடி பயன்படுத்த வேண்டும் என்றும் கடைசி நேரம் வரை காத்திருக்காமல் விண்ணப்ப படிவங்களைப் பெற்று மனுச் செய்ய வேண்டும் என்றும் அவர் கேட்டுள்ளார்.

விண்ணப்பப் படிவங்களை மாவட்டப் பயிற்சி ஆணையாளரிடம் இருந்து பெற்றுக் கொள்ளலாம் (அ)

## உற்பத்தி

முல்லை மாவட்ட கருவேலன் கண்டல் எனும் இடத்தில், தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனக் கைத்தொழிற் பகுதி எண்ணெய்ச் செக்கு அமைத்து, நல்லெண்ணெய் உற்பத்தியில் ஈடுபட்டு வருகின்றது.

இந்த எண்ணெய்ச் செக்குக்கு வேண்டிய எள் இந்த மாவட்டத்திலும், வவுனியா மாவட்டத்திலும் ஏராளமாகக் கிடைப்பதனால் இத்திட்டம் வெற்றிகரமாக செயற்பட்டு வருகின்றது. (ஒ)

## கணனிப் பயிற்சி

யாழ் பல்கலைக்கழகம் 22 கணக்காளர்களுக்கும் நிர்வாக சேவை அலுவலர்களுக்கும் மற்றைய சேவையாளருக்கும் கணனிப் பயிற்சி வழங்கவுள்ளது.

இதற்காக 2 லட்சத்து 20 ஆயிரம் ரூபா பணத்தை மன்ற உறுப்பினர் திரு.க. நவரத்தினம் ஒதுக்கியுள்ளார்.

## பரல்களில் மரக்கன்றுகள் வளர்ப்பு

யாழ்ப்பாணம் ஜூன் 14

தேசத்தின் ஒருங்கிணைந்த அபிவிருத்தியையும், இயற்கை வளப்பாதுகாப்பையும் இலக்காகக் கொண்டு வெற்று பரல்களில் மரக்கன்றுகள் வளர்க்கும் திட்டம் ஒன்றை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினர் நடைமுறைப் படுத்தியுள்ளனர்.

இந்த வகையில் இவ்வருடம் வெற்று பரல்களில் 4 ஆயிரம் மரக்கன்றுகளை உற்பத்தி செய்து 5 அடிவரை வளர்த்த பின் நடுகை செய்து பராமரிக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

மரக்கன்றுகளை பெரிதாக வளர்க்கத்தக்கவாறும், பரல்களை மீளவும் பாவிக்கத்தக்கவாறு பரல்கள் வடிவமைக்கப்பட்டுள்ளன.

இதற்காக தற்போது ஆயிரம் வெற்று பரல்கள் எடுத்து அவற்றை நடுவாக வெட்டிய பின்பு ஒவ்வொன்றும் சிறிய பரல்களாக உவக்கி அதற்குள் மண் மணல், எரு என்பன இட்டு மரக்கன்றுகள் உற்பத்தி செய்யப்படுகின்றன.

காமதேனு விவசாயப் பண்ணையில் வைத்து நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் இச் செயற்பாட்டில் தற்போது 3 ஆயிரம் கன்றுகள் நடுகை செய்யப்பட்டுள்ளன. மிகுதி ஆயிரம் கன்றுகள் நடுவதற்கான வேலைகள் துரிதமாக நடைபெற்றுவருகின்றன. (ஒ)

## தேர்தலுக்காக டி. பியின் இரு அவசரத் திட்டங்கள்!

தேர்தலை எதிர் நோக்கும் ஜனாதிபதி விஜேதுங்க இரண்டு அவசரப் பணிகளை மேற்கொள்ளத் திட்டமிட்டுள்ளார் என்று தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

★ இலங்கையருக்கு வெளிநாட்டு தொழில் வாய்ப்பை நிறைய உருவாக்குவது!

★ தமது எதிர்காலத் திட்டங்கள் குறித்து ஜனாதிபதி செயலகத்தில் தொழில் சார் நிபுணர்கள் மற்றும் தொழில் சார் குழுக்களுடன் தொடர் கலந்துரையாடல்களை நடத்துவது —

இவை இரண்டுமே ஜனாதிபதியின் செயல் அட்டவணையில் முதலிடம் பெற்றுள்ள விஷயங்கள் என்று 'சண்டே ஒப்சேர்வர்' தகவல் வெளியிட்டிருக்கிறது. (ஒ-எ)

## பழுதான நிலையில் அம்புலன்ஸ்!

அச்சுவேலி அரசினர் வைத்தியசாலை அம்புலன்ஸ் பழுதடைந்துள்ளதால், நோயாளர்கள் பெரிதும் பாதிப்படைந்துள்ளனர்.

கடந்த மூன்று வாரங்களுக்கு மேலாக அம்புலன்ஸ் பழுதடைந்த நிலையில் உள்ளதால், ஏழை நோயாளர்கள் பருமளவு பணத்தைச் செலவிட வேண்டியவர்களாக உள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. (ஒ-155]

# அகதிமுகாம்களை திருத்த திறைசேரி நிதி வழங்கும்!

## யாழ், அரச அதிபர் அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 14

யாழ் மாவட்டத்தில் உள்ள அகதிமுகாம்களைப் புனரமைக்கத் தேவையான நிதியை வழங்க திறைசேரி இணக்கம் தெரிவித்துள்ளது.

யாழ். மாவட்டத்தில் உள்ள அகதிமுகாம்கள் பெரிதும் சேதமாகியுள்ளன.

அவற்றை புனரமைக்கத் தேவையான செலவினங்கள் பற்றிய அறிக்கைகளை பிரதேச செயலர்கள் யாழ் அரச அதிபரிடம் சமர்ப்பித் திருந்தனர் என்று தெரிவிக்கப்பட்டது

இந்த செலவின அறிக்கைகளை யாழ் அரச அதிபர் புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சு அதிகாரிகளிடம் கையளித்ததாகவும் —

புனர்வாழ்வு அமைச்சின் செயலாளர் இந்த அறிக்கைகளை திறைசேரியின் அதிகாரிகளிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாகவும் —

அதற்கான நிதியை எதிர்வரும் திங்கட்கிழமை வழங்கி திறைசேரி சம்மதம் தெரிவித்துள்ளதாகவும் யாழ் அரச அதிபர் கொழும்பில் இருந்து செயலகத்துக்கு அறிவித்துள்ளார் (ஒ-3)

சுதந்திரக்கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர்:

# சிறிமா தெரிவுக்கு பின்னால் மகாநாயக்க தேரர்கள்!

## லங்கா கார்டியனில செய்தி

கொழும்பு, ஜூன் 14

மல்வத்தை மற்றும் அஸ்கிரிய பீடங்களின் மகாநாயக்க தேரர்களின் தலையீட்டைத் தொடர்ந்தே, திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவை ஜனாதிபதி வேட்பாளராக சுதந்திரக் கட்சி தெரிவு செய்ததாக தற்போது அறிவிக்கப்படுகிறது.

மகாநாயக்க தேரர்களின் இத்தலையீடு இப்போது பகிரங்க ரகசியமாகி விட்டதாக 'லங்கா கார்டியன்' ஆசிரியர் மேர்வின் டி சில்வா தெரிவித்திருக்கிறார்.

சந்திரிகா குமாரணதுங்காவிற்கு ஆதரவானதும், கட்சித் தலைமைப் பீடத்துக்கு அழுத்தம் கொடுக்கக் கூடியதுமான செல்வாக்கு மிக்க குழுக்கள் தமிழர் கட்சிகளுடன் உடன்பாடு ஒன்றுக்கு வந்துள்ளதான பத்திரிகைச் செய்திகளால் தாங்கள் குழப்பமடைந்திருந்ததாக மகாநாயக்க தேரர்கள் சுதந்திரக் கட்சித் தலைமைப்பீடத்துக்கு தெரிவித்தனர் என்றும் —

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தானே ஜனாதிபதி வேட்பாளர் என்று சிறிமாவோ அறிவித்தது மகாநாயக்கர்களின் இத்தலையீட்டின் நேரடிப் பலன் தான் என்றும் மேர்வின் டி சில்வா தெரிவித்தார்

(இ-எ)

## உதிரம் கண்ணீராக விழுந்தது

துயரைச் சுமந்தொரு காற்று வந்தது
துயரால் கல்வி உலகு அழுதது
உயரப் பறந்த பல்கலைப் பறவையின்
உதிரம் கண்ணீராக விழுந்தது
அயரா உழைப்பில் தமிழ்மண் வளங்கள்
அனைத்தும் ஓங்கிடக் கனவில் திளைத்தவன்
உயிரும் விண்ணில் கலந்தது தமிழோ
உள்ளம் விம்மி அழுதது அழுதது!

கரையிலாக் கல்விப் பெருங்கடல் சிரம்
கலங்கரை விளக்காய் திகழ்ந்தவன் இம்மண்
பொருளாதார உயர்வினை எட்டும்
புதிய கருக்கள் விதைத்தவன் மக்கள்
துரைராசாவெனப் புகழ்ந்து கொண்டு
துடிக்க வைத்தெமைப் பறந்து சென்றதால்
கரையே காணாப் பெருந்துயர் கொண்டாள்
கலங்கித் தவித்தாள் கல்வியின் தாயாள்!

— நெடுந்தீவு லக்ஸ்மன்

சீதனம் என்பது சிறுமை- அந்தச் சிறுமையை ஒழிப்பது பெருமை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## தம்பிமுத்து செல்லையா (ஜெமினி)

காரைநகர், களித் தெருவைச் சேர்ந்தவரும் காரைநகர் ஜெமினி ஸ்ரோர்ஸ் உரிமையாளரும், தற்போது டாக்டர் சுப்பிரமணியம் வீதியில் வசிப்பவருமாகிய தம்பிமுத்து செல்லையா (ஜெமினி) காலமாகிவிட்டார்.

அன்னார் மீனாட்சியின் அன்புக் கணவரும், சோமசுந்தரம், வன்னியசிங்கம், நகுலேஸ்வரன் (ஜெமினி ஸ்ரோர்ஸ் சுன்னாகம்), ஏரம்பமூர்த்தி, ஏரம்பநாதன், மகேஸ்வரன் ஆகியோரின் அன்புத் தந்தையும் செல்லாதேவி, சரஸ்வதி, சுபேதினி ஆகியோரின் அன்பு மாமனாரும், ரமேஸ், சுரேஸ், பகீரதி, ஜெனனி ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ்சென்ற மீனாட்சி, வீரசிங்கம் மற்றும் சின்னம்மா, குமாரசாமி ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் சுன்னாகம் டாக்டர் சுப்பிரமணியம் வீதியில் உள்ள மகன் சோமசுந்தரம் இல்லத்தில் இன்று (14 – 06 – 1994) செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு நடைபெற்று, சுன்னாகம் கொத்தி ஆலடி மயானத்தில் தகனக் கிரியைகள் நடைபெறும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்,

தகவல்:
செ. சோமசுந்தரம்,
(மகன்).

டாக்டர் சுப்பிரமணியம் வீதி,
சுன்னாகம்.
(31399)

## வல்லிபுரம் நடராசா

அச்சுவேலியைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் கோண்டாவில் வடக்கை வசிப்பிடமாகக் கொண்டவருமாகிய வல்லிபுரம் நடராசா அவர்கள் 13 – 06 – 94 நேற்றுக் காலமானார்.

அன்னார் மனோன்மணியின் அன்புக் கணவரும், ஞானசோதி, ஞானபாலசிங்கம், ஜெயபாலசிங்கம் (யாழ் தொழில் நுட்ப நிறுவனம் — J. T. I), தனபாலசிங்கம் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தந்தையும், சிறிகாந்தராஜா, சந்திராதேவி ஆகியோரின் அன்பு மாமனாரும், தனேஸ்குமார் (சுவிஸ்), தர்மினி, ரஜீவ்குமார், தாரணி, யாழினி, திவாகரன், தாட்சாயினி ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரது பூதவுடல் இன்று செவ்வாய்க்கிழமை (14 - 06 - 94) நண்பகல் 12.00 மணியளவில் அன்னாரது இல்லத்திலிருந்து தகனக் கிரியைக்காக கோண்டாவில் கொட்டைக்காடு மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
ந: ஜெயபாலசிங்கம் J.T.I.
(மகன்)

சிவன் வீதி,
கோண்டாவில் வடக்கு,
கோண்டாவில்.
(31405)

திருமதி

## சுந்தரலிங்கம் வசந்தகுமாரி

புங்குடுதீவு 3 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், வசந்தபுரம், தற்பொழுது யாழ்ப்பாணம் நல்லூர் 29 / 4 C மருதடி வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சுந்தரலிங்கம் வசந்தகுமாரி 13 - 06 - 1994 நேற்று காலமானார்.

இவர் நாகேந்திரம் சுந்தரலிங்கத்தின் அன்பு மனைவியும், குமாரசாமி, காலஞ்சென்ற காமாட்சி தம்பதிகளின் மகளும் காலஞ்சென்ற நாகேந்திரம், இராசம்மா தம்பதிகளின் மருமகளும், அனுசா, சுபாஜினி (சுண்டுக்குளி மகளிர் கல்லூரி மாணவிகள்), மயூரன் (கனகரட்ணம் மகா வித்தியாலயம்) ஆகியோரின் அன்புத் தாயாரும், நவரட்ணசிங்கம் (கந்தசாமி), காலஞ்சென்ற பாலசிங்கம், சரஸ்வதி, ரட்ணசிங்கம் (கொழும்பு), நாகேஸ்வரி (கனடா), தனபாலசிங்கம் (சுவிஸ்), புஸ்பவதி (கனடா), சாந்தகுமாரி (சுவிஸ்), மகேந்திரன் (சுவிஸ்), வனிதாம்பாள் (சுவிஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், பரமேஸ்வரி, மகாலட்சுமி, ராஜேஸ்வரி, கனகலிங்கம், தனபாலசிங்கம், சண்முகலிங்கம், மகாலிங்கம், அமிர்தலிங்கம் ஆகியோரின் மைத்துனியும், காலஞ்சென்ற கனகசிங்கத்தின் மருமகளும், லெட்சுமி (மாவிட்டபுரம்), காலஞ்சென்ற சற்குணம் ஆகியோரின் பெறாமகளும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றி பின்னர் அறிவிக்கப்படும். உற்றார், உறவினர், நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
நா. சுந்தரலிங்கம்
(கணவர்)

29/4 C மருதடி வீதி,
நல்லூர்.
(31407)

செல்வி

## சரோஜினிதேவி தில்லையம்பலம்

(இளைப்பாறிய ஆசிரியை)

செல்வி சரோஜினிதேவி தில்லையம்பலம் (முன்னாள் ஆசிரியை — மானிப்பாய் மெமோறியல் கல்லூரி, யாழ் சென் ஜேம்ஸ் ம.வி., கனகரட்ணம் ம.வி.) நேற்றுக் காலமானார்.

இவர் காலஞ்சென்றவர்களான தில்லையம்பலம்—நாகம்மா தம்பதியினரின் அன்பு மகளும், திருமதி குணலட்சுமி, கனகசுந்தரம், திருமதி மோட்சலட்சுமி கனகரெத்தினம், திருமதி லோசனாதேவி இராசகோபால், திருமதி சகுந்தலாதேவி விசுவரெத்தினம், சோதிராசா, உருத்திரராசா, விமலராசா ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற டாக்டர் கனகசுந்தரம் மற்றும் வயித்திலிங்கம், கனகரத்தினம், வேலுப்பிள்ளை இராசகோபால், பொன்னம்பலம் விசுவரெத்தினம் ஆகியோரின் அன்பு மைத்துனியும், சதீஸ், மைலினி, அரவிந்தன், அகிலன் ஆகியோரின் பெரிய தாயாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நேற்று பி.ப. 4-30 மணியளவில் அரியாலை சித்துப்பாத்தி மயானத்தில் தகனம் செய்யப்பட்டது என்பதனை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

தகவல்
சகுந்தலாதேவி விசுவரெத்தினம்
(சகோதரி)

103, கச்சேரி கிழக்கு ஒழுங்கை,
அரியாலை,
யாழ்ப்பாணம்.
(31408)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 392/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 14-06-1994 இல் அச்சிட்டு வெளியிடப் பெற்றது.

பாடசாலைகளை புனரமைக்க

# 4,000 அஸ்பெஸ்டஸ் தகடுகள் கப்பலில் வந்து சேர்ந்தன

யாழ்ப்பாணம், ஜூன் 14

யாழ். மாவட்டத்தில் உள்ள பாதிக்கப்பட்ட பாடசாலைகளுக்கு தற்காலிக கொட்டகைகள் அமைக்க 4 ஆயிரம் அஸ்பெஸ்டஸ் தகடுகள் மாஹோ கப்பல் மூலம் எடுத்து வரப்பட்டுள்ளன.

இக்கப்பலில் பாடசாலைகளுக்கு தேவையான அலுமாரிகள் மற்றும் பலவித தளபாடங்களும் எடுத்துவரப்பட்டுள்ளன.

அதேவேளை — தற்சமயம் தட்டுப்பாடாக உள்ள 50, 20, 10, ரூபா நோட்டுக்களும் மக்கள் வங்கிக்கு இக்கப்பலில் எடுத்து வரப்பட்டுள்ளன.

# ஆசிரியருக்கு உடனடியாக சம்பள மற்றும் தரமுயர்வு

## ஜனாதிபதி விஜேதுங்கா பணிப்பு

கொழும்பு, ஜூன் 14

அனைத்து ஆசிரியர்களுக்கும் சம்பளத்தை கூட்டுமாறும், அதே போன்று அப்பணியில் ஈடுபட்டுள்ளோரின் சேவைக்கேற்ப தரமுயர்த்துமாறும் ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கா கல்வி அமைச்சுக்கு பணிப்புரைகளை விடுத்துள்ளார்.

நாட்டில் உள்ள இரண்டு லட்சம் ஆசிரியர்களுக்கும் சம்பள அதிகரிப்புக்காக 87கோடி ரூபா வரை செலவாகும் என கணக்கிடப்பட்டிருக்கிறது.

கல்விச்சேவைச் செயலாளர் ஆர். ஐ. டி. அலஸ் இது தொடர்பாக கடந்த 9 ஆம் திகதி ஜனாதிபதியைச் சந்தித்து, இலங்கை ஆசிரியர் சேவையை மேம்படுத்துவதற்கான செயல் திட்டங்கள் குறித்து பேச்சு நடத்தியிருந்தார்.

செலவாகும் பணத்தையிட்டு சிந்திக்காது ஆசிரியர்களின் முன்னேற்றத்துக்கான செயல் திட்டங்களை உடன் செயற்படுத்துமாறு தேசிய கல்விச் சேவைச் சங்கமும் ஜனாதிபதிக்கு சுட்டிக்காட்டியுள்ளது.

புதிய திட்டத்தின் கீழ் அதிபர்களுக்காக தனியான அதிபர் சேவை பிரிவொன்றும்—

ஆசிரியர்களுக்கு தனியான ஆசிரியர் சேவைப்பிரிவு ஒன்றும்—

திறக்கப்படவேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டுள்ளது. (உ-3)

# புகழுடல் ஊர்தியில்....

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

| | | |
|---|---|---|
| பிற்பகல் 1-15 — | கே.கே.எஸ். வீதியூடாக யாழ். இந்து சந்தி | — யாழ். இந்து மாணவர் |
| பிற்பகல் 1-30 — | கே.கே.எஸ் வீதியூடாக வண்ணை சிவன் சந்தி | — வைத்தீஸ்வரா மாணவர் |
| பிற்பகல் 2-00 — | கே. கே. எஸ். வீதி - ஆஸ்பத்திரி வீதி ஊடாக மணிக்கூட்டு கோபுரத்தடி | — மத்திய கல்லூரி, வேம்படி மாணவர் |
| பிற்பகல் 2-00 — | முதலாம் குறுக்குத்தெரு, பிரதான வீதி, பஸ்தியான் சந்தி, கொழும்புத்துறை வீதி, சுண்டுக்குளிச் சந்தி | — சென். பற்றிக்ஸ், கொன்வென்ட், சென் ஜோன்ஸ், சுண்டுக்குளி மகளிர் மாணவர். |
| பி.ப. 2-30 — 4-00 — | பழையபூங்கா வீதி, கண்டி வீதி. நாவற் குழி, கைதடி, சாவகச்சேரி | — டிறிபேர்க், சாவகச்சேரி இந்து, சாவகச்சேரி மகளிர் மாணவர். |
| மாலை 4-00 - 5-00 — | கண்டி வீதியால் கொடிகாமம் சந்தி. | |
| மாலை 5-00 — 7-00 — | பருத்தித்துறை வீதி, மந்திகைச் சந்தி, யாழ்-பருத்தித்துறை வீதி, கடற்கரை வீதி, ஹாட்லி கல்லூரி | |
| இரவு 7-15 - 10-00 — | கடற்கரை வீதி. திக்கம் சந்தி, வதிரி ஊடாக மாலு சந்தி, உடுப்பிட்டி வீதி, பேராசிரியர் இல்லம். | |

# கண்ணீர் அஞ்சலி

யாழ். பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தரும்
இணையற்ற கல்வியாளரும்
சமூக நேசிப்பாளருமான

## பேராசிரியர் அ. துரைராசா

அவர்களுக்கு
எமது கண்ணீர் அஞ்சலி

"உம்மை வாழ்த்திய நாங்கள்
இன்று வாய்மூடி மௌனமானோம்
உம் குழிஞ்சிரிப்பும் கம்பீரநடையும்
அறிவுச்சுடர் வீசும் கண்களும்
நினைவில் நிற்க!
ஐயா நீர் மௌனமானதேன்?"
ஆன்மா சாந்தியடைக!

இயக்குநர், அலுவலர்கள்,
அங்கத்தவர்கள்.
மகளிர் அபிவிருத்தி நிலையம்.

07, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.
13-06-94
(31397)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம்: 21 — 12 — 1943



மறைவு: 15 — 05 — 1994

## அமரர் AE ஜெயசிங்கம அவர்கள்

(மதுவரி அத்தியட்சகர் - வவுனியா)

மதுவரியினதிகாரி மாண்புமிகு ஜெயசிங்கம்
கதியடையுன்னியே கழற்றினார் பூதவுடல்
மதியடனே
சற்பார்க்கு வேம்பெனிலும் சாகிவியிலவதமக்கு
ஒப்பாரிங் கொருவரில்லைன்றோது.
ஆன்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்

மதுவரி உத்தியோகத்தர்கள்

மதுவரித் திணைக்களம்,
கிளிநொச்சி.
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஜூன் 14

யாழ். மாநகராட்சி மன்ற வட்டார மகளிர் அபிவிருத்திக் குழுக்களின் அங்கத்தவர்களுக்கான மூன்று நாள் கலந்துரையாடலும் செயலமர்வும் இன்று செவ்வாய்க்கிழமை காலை 6.30 மணிக்கு ஆரம்பமாகி யாழ். நாவலர் மண்டபத்தில் நடைபெறும்.

மாநகராட்சி மன்ற வெளிக்கள ஊழியர்களினால் இனம் காணப்படாத— ஆர்வமுள்ள — பெண்கள் இதில் இணைந்து நகர வாழ் மக்களின் சேவைக்காக செயலாற்ற விரும்பின், இன்று காலை 8 30 மணிக்கு யாழ். மாநகராட்சி மன்ற சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் உள்ள ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதியப் பகுதியுடன் தொடர்பு கொள்ளுமாறு யாழ். மாநகராட்சி மன்ற சுகாதார வைத்திய அதிகாரி கேட்டுள்ளார். (உ-162)

# இரு வார காலம் சிறிமா ஓய்வு

சிங்கப்பூர், ஜூன் 14

சிங்கப்பூர் மருத்துவமனை ஒன்றில் நேற்று அறுவைச் சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்ட திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவின் உடல் நிலை ஸ்திரமாக இருப்பதாக அவரது குடும்ப உறுப்பினர்கள் தெரிவித்தனர்.

இரண்டு வாரங்கள் படுக்கையில் ஓய்வு எடுக்கும்படி சிறிமாவோவுக்கு டாக்டர்கள் ஆலோசனை கூறியுள்ளனர்.

# இன்று

மெய்கண்டதேவர் ஆதீனம் இன்று செவ்வாய்க்கிழமை காலை 9 மணி முதல் சோமாசிமாற நாயனார் குருபூசை வழிபாட்டினையும் நக்கீரர் நினைவுரைப் பேருரையையும் யாழ். சிறாம்பியடி சவைப்புலவர் வீதி திருவாசக மன்றத்தில் நிகழ்த்துகின்றது.

## பேராசிரியர்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

போகும் போது புகழுடலுக்கு அஞ்சலி செலுத்துவதற்காக அங்கு பெரும் எண்ணிக்கையானோர் திரண்டிருந்தனர்.

இன்று முற்பகல் 10 மணிவரை பொதுமக்கள் அங்கு அஞ்சலி செலுத்தலாம்.

இன்று முற்பகல் 10 மணி முதல் 11 மணிவரை பல்கலைக்கழகத்தைச் சேர்ந்தோர் அஞ்சலி செலுத்துவர்.

தொடர்ந்து முற்பகல் 11.00 மணிமுதல் 11.30 மணிவரை அங்கு அஞ்சலி உரை நிகழ்த்தப்படும்.

அதனைத் தொடர்ந்து பல்கலைக்கழக மாணவர்கள் பேராசிரியரின் புகழுடலை திருநெல்வேலிச் சந்தி வரை ஊர்வலமாகத் தாங்கிச் செல்வர்.

## தெற்கில்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ளதாகத் தெரிவிக்கப்படுகிறது,

இதேவேளை —

கம்பஹா விக்கிரமாராச்சி ஆயுர்வேதக் கல்லூரிக்கு பல்கலைக்கழக அந்தஸ்து வழங்கப்படாததைக் கண்டித்து அக்கல்லூரியின் மாணவர்கள் நேற்று நண்பகல் கொழும்பு கண் ஆஸ்பத்திரிக்கு அருகில் உள்ள லிப்டன் சுற்றுவட்டத்தில் மறியற் போராட்டத்தை நடத்தினர்.

மாணவர்கள் வீதியை பயன்படுத்துவதைத் தடுப்பதற்காக 300க்கு அதிகமான பொலிஸார் குண்டாந்தடிகள் மற்றும் பிரம்புக் கேடயங்கள் சகிதம் கடமையில் ஈடுபட்டிருந்தனர்.

நேற்றைய மறியற் போராட்டத்தில் பெருந் தொகையான மாணவர்கள் கலந்து கொண்டனர். கம்பஹா மாவட்ட ஐ. க. எம். பி. ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே, அலவி மௌலானா ஆகியோரும் இதில் பங்கு பற்றினர் (உ-எ-6

இணுவில் கந்தசுவாமி கோவில்

# கொடியேற்றத் திருவிழா

14—07—1994 நண்பகல் 12 மணிக்கு கொடியேற்றம் மாலை 4 மணி முதல் 7 மணி வரை ஈழத்தின் தலை சிறந்த நாதஸ்வர தவில் வித்துவான்களின் நாதஸ்வரக் கச்சேரி இடம்பெறும்.

இரவு 8 மணி

'இந்த மண் எங்களின் சொந்தமண்" புகழ்

S. G சாந்தன் இசைக் குழுவினரின்

## 'இன்னிசை கானங்கள்'

இடம்பெறும்.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்;

இங்ஙனம்
கொடியேற்ற விழா உபயகாரர்
(7237)

# நெஞ்சு நிறைந்த நன்றிகள்

## 'மௌலி'யின் நடன அரங்கேற்றம்

10 - 6 - 94 அன்று இலங்கைக் கலைஞர் கலை மண்டபம் கண்ட, எங்கள் செல்வி மௌலீஸ்வரியின் நடன அரங்கேற்றம் இனிதே நிறைவேறத் துணையான சான்றோர்கள், கலைஞர்கள், ரசிகர்கள் மற்றும் அன்பு உறவுகளை மௌலியும், நாங்களும் என்றென்றும் மறவோம்; அனைவருக்கும் எங்கள் நெஞ்சு நிறைந்த நன்றிகள்.

புஷ்பநாதன் — சிவசாந்தி
தம்பதிகள்
இல: 3 மணல்தறை ஒழுங்கை,
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.
(31402)

# கலந்துரையாடல் அழைப்பு

பலாலி ஆசிரிய கலாசாலையில் ஓய்வுபெற்ற
பழம்பெரும் இசை விரிவுரையாளர்

## பொன். முத்துக்குமாரன்

அவர்களது

## பவள விழாவும் இசை விழாவும்

தெல்லிப்பழை கலாரஞ்சன சபாவும், மேற்படி விரிவுரையாளரின் மாணவர்களும் இணைந்து நடத்தவுள்ள மேற்படி விழா பற்றிய கலந்துரையாடல் 16-06-1994 வியாழக்கிழமை மாலை 4.00 மணிக்கு மருதனார்மடத்திலுள்ள மகாஜனக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும்

மேற்படி இசை விரிவுரையாளரின் மாணவர்களையும், அபிமானிகளையும் சமூகந்தந்து ஆலோசனை வழங்குமாறு பணிவுடன் அழைக்கின்றோம்.

சங்கீதபூஷணம் வி:கே. நடராஜா,
டச் வீதி, உடுவில், சுன்னாகம்;
விழா அமைப்பாளர் சார்பில்
[7236]

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்



காரைநகர் நாவலடிக் கேணியடியைச் சேர்ந்தவரும், விசுவமடுவை வசிப்பிடமாகக் கொண்டவருமாகிய

அமரர்

## செல்லத்துரை குலசேகரம்பிள்ளை

(உரிமையாளர் "சிவனேஸ்வரி ஸ்ரோர்ஸ்" விசுவமடு)

தோற்றம்: 10 — 06 — 1936
மறைவு: 19 — 05 — 1994

அந்தியேட்டி: 16 — 06 — 1994
திதி: 18 — 06 — 1994

அன்பின் உறைவிடமாய், மிகுந்த பாசத்தோடு எம்மை வழி நடத்திய எமது அன்பு ராசாவே! திடீரென எம்மை தவிக்க விட்டு பிரிந்து சென்று விட்டீர்களே! என்றும் உங்கள் அன்பை மறக்கமாட்டோம். அன்னாரின் இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்டும் மற்றும் பல்வேறு உதவிகளை செய்து தந்த அன்பு நெஞ்சங்களுக்கு எமது மனமார்ந்த நன்றிகள்.

அன்னாரின் அந்தியேட்டிக்கிரியைகள் 16-06-1994 இலும், திதி 18-06-1994 இலும். 13ஆம் கட்டை விசுவமடுவிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற இருக்கின்றன அன்னாரின் ஆத்ம சாந்திக்காக நடைபெற இருக்கும் வைபவங்களில் அயலவர்கள், உறவினர்கள், நண்பர்கள் கலந்து கொண்டு பிரார்த்திக்குமாறு அன்புடன் வேண்டுதல் செய்யும்;

மனைவி, மக்கள்.

தகவல்:
செ. கோடிலிங்கம்,
பண்ணாகம்.
[31390]